Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 04 திங்கட்கிழமை (18.05.2015) பக்கங்கள் 20 ஓசை – 230

## துயர் சூழ்ந்த நாட்களை நினைவேந்தி நிமிர்ந்தெழ நாம் உறுதிகொள்வோம்

### ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் அறிக்கை



எமது மக்கள் மீது அழிவுகளையும் அவலங்களையும் சுமத்தி விட்டுச் சென்றதுயர் சூழ்ந்த நாட்களை எமது மனங்களில் நினை வேந்தி, அந்தத் துயர்களில் இருந்து உரிமையின் திசை நோக்கி நாம் நிமிர்ந்தெழ உறுதிகொள்வோம் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கடந்த காலப் போரில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அந்த அறிக்கையில், மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நீதியான எமது உரிமைப் போராட்ட வரலாற்று காலம் தொட்டு இறுதியான முள்ளிவாய்க்கால் அழிவுயுத்தகாலம் வரை எமதுமக்கள் சந்தித்த இழப்புக்கள் ஏராளம். உயிரிழப்புகளும், சொத்திழப்புகளும், சொந்த நிலங்களை பறிகொடுத்து இரவல் நிலங்களைத்தேடி அலைந்தோடிய அவலங்களும் அளவிடமுடியாதவை. எண்ணற்ற கனவுகளையும், எதிர்காலம்

19 ஆம் பக்கம் பார்க்க

## இறுதிக் கட்ட யுத்தமீறல் நீதியான விசாரணை

### வலியுறுத்துகிறது கனடா



இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதியான விசாரணை நடாத்தப்பட வேண்டும் என கனடாவின் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜேஸன் கென்னி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## ஆறாத வடுக்களுடன் முள்ளிவாய்க்கால்

### ஆறு ஆண்டுகளாகியும் தீராத சோகம்

யுத்தம் முடிவடைந்து ஆறு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதிலும், இறுதி யுத்தம் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பிரதேசம், இப்போதும், பிரச்சினைகளுக்கும், சவால்களுக்கும் முகம் கொடுத்து வருவதாக அங்கு மீள் குடியேறியுள்ளவர்கள் கூறுகின்றார்கள்.

வீடமைப்புத் திட்டங்கள், வாழ்வாதாரத் திட்டங்கள் என்பன அங்கு செயற்படுத்தப்பட்டிருக்கின்றன. பாடசாலைகள் இயங்குகின்றன. பிரதான வீதி சீரமைக்கப்பட்டிருக்கின்றது. எனினும், புதுமாத்தளனில் இருந்து முள்ளிவாய்க்காலை ஊடறுத்து முல்லைத்தீவுக்குச் செல்லும் முக்கிய வீதி இன்னும் கவனிப்பாரற்ற நிலையிலேயே காணப்படுகின்றது.

கடற்றொழிலையே இப்பகுதி மக்கள் தமது வாழ்வாதாரத்திற்கான பிரதான தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். எனினும் பல குடும்பங்கள் இன்னும் வறுமையில் வாடுகின்றன. உணவுக்கும், பிள்ளைகளின் கல்விக்கும் அல்லாட நேர்ந்துள்ளதாக அந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

தொண்டு நிறுவனங்களின் உதவியோடு வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்ற போதிலும், அந்த வீடுகள் முற்றுப் பெறாத நிலையிலேயே காணப்படுகின்றன. அந்த வீடுகளின் சுவர்களுக்குரிய சிமெந்து பூச்சு வேலை

19 ஆம் பக்கம் பார்க்க

## இ.போ.ச. - ஆட்டோ விபத்து; கோப்பாயில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம் கோப்பாய் சந்தியில் இ.போ.ச. பஸ்ஸும் - ஆட்டோவும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மூவர் காயமடைந்தனர்.

நேற்று இடம்பெற்ற இந்த விபத்தில் ஆட்டோவில் பயணித்தவரான' திருகோணமலையைச் சேர்ந்த அன்ரனி யூட் பிரகாஸ் (வயது-45) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபை

19 ஆம் பக்கம் பார்க்க

# புங்குடுதீவு மாணவி படுகொலை மேலும் நால்வர் நேற்று கைது



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள்

## மக்களின் ஆர்ப்பாட்டத்தால் பதற்றம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை மாணவி சி.வித்தியா பாலியல் வன்புணர்விற்குப் பின்னர் மிகக் கோரமாகப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் நால்வரைப் பொலிஸார் நேற்றைய தினம் கைது செய்துள்ளனர்.

புங்குடுதீவைச் சேர்ந்த சிவதேவன் துசாந்தன், சசிகரன், சந்திரராஜ், நிசாந்த் ஆகிய நால்வரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்று மாலை 6.00 மணியளவில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறிகாட்டுவானில் வைத்து நால்வரையும் பொலிஸார் கைது செய்ததை அறிந்த பொது மக்கள் ஒன்றுதிரண்டு கைது செய்யப்பட்டவர்களை பொலிஸார் தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமெனக் கோரி ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

இதனால் அங்கு நீண்ட நேரமாக பதற்றமும் பெரும் பரபரப்பும் ஏற்பட்டிருந்தது. மக்களின் ஆர்ப்பாட்டத்தை அடுத்து கைது செய்யப்பட்ட நால்வரும் குறிகாட்டுவானிலிருந்து கடல் மார்க்கமாக

19 ஆம் பக்கம் பார்க்க



மக்களால் பிடிக்கப்பட்ட உறவினர்..

## மூன்று தினங்களுக்கு வடக்கில் மழை

இடை அயன ஒடுங்கல் வலயம், வடக்கு பகுதிக்கு மேல் காணப்படுவதால் தற்போது மழை வீழ்ச்சி காணப்படுகின்றது. இது தற்போது நாட்டைக் கடந்து செல்வதால் தொடர்ந்து மூன்று தினங்கள் இவ்வாறு சீரற்ற கால நிலை தொடருமென திருநெல்வேலி பிராந்திய வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி டி.பிரதீபன் நேற்றுத் தெரிவித்தார்.

இடை அயன ஒடுங்கல் வலயமானது தற்போது நாட்டை விட்டுக் கடந்து செல்ல ஆரம்பித்துள்ளது. இந்நிலையில் இது தற்போது வடபகுதிக்கு மேல் காணப்படுவதால் இக்கால நிலை நிலவுகின்றது. அது இன்னும் மூன்று தினங்களில் சுமுகமான காலநிலைக்குத் திரும்பும்.

கடந்த 11ஆம் திகதியில் இருந்து நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 11.30 மணி வரைக்கும் 172.6 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதனைவிடக் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து

19 ஆம் பக்கம் பார்க்க

## கோத்தாவின் மனு குறித்து பிரதமரின் கருத்து தவறு

### கண்டிக்கிறார் நிமால்

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவின் அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பில் உச்சநீதிமன்றம் வழங்கிய உத்தரவு குறித்து பிரதமர் வெளியிட்ட கருத்து சட்டரீதியற்றது என எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் தொடர்பில் பிரதமர் முன்வைத்த கூற்று முற்றிலும் தவறானது.

நிதி மோசடி விசாரணை பிரிவினரின் நடவடிக்கைகளுக்கு சவால் விடுக்கும் வகையில் கோத்தாபய ராஜபக்ஷ தாக்கல்

19 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் திருத்தச் சட்டம் புதிய யோசனைகள் அமைச்சரவையில்

20 ஆவது திருத்தச் சட்டமான தேர்தல் திருத்தச்சட்டத்திற்கு, முன்வைக்கப்பட்டுள்ள புதிய யோசனைகள் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ளதாக அரச நிர்வாக அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகள், தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பான பல யோசனைகளை முன்வைத்திருந்தன.

இந்த யோசனைகள் அனைத்தும் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்துக்கும் எதிர்வரும்

19 ஆம் பக்கம் பார்க்க

# அட்டவணைப்படுத்தப்படாத வெற்றிடங்கள் காலதாமதமின்றி நிரப்பப்பட வேண்டும்

## வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளின் கீழுள்ள அனைத்து அட்டவணைப்படுத்தப்படாத பதவி வெற்றிடங்கள் எவ்வித காலதாமதமுமின்றி உடன் நிரப்பப்பட வேண்டும். இச்செயற்பாட்டை உள்ளூராட்சி சபைகளின் சகல தவிசாளர்களும் முனைப்புடன் முன்னிறுத்த வேண்டும்.

இவ்வாறு வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் சகல உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களை கோரியுள்ளார்.

வடக்கில் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடம் நிரப்பப்படாத நிலை, காலதாமதம குறித்து அமைச்சு செயலாளர் விடுத்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடம் நிரப்பப்படாத சூழ்நிலை அவதானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான காலதாமதங்களை இனியும் எதிர்கொள்ளாது உடனடியாக செயற்படும் வண்ணம் வடமாகாண ஆளுநரின் அதிகார கையளிப்புக்கு இணங்க உரிய நடவடிக்கைகளை தவிசாளர்கள் மேற்கொள்ள வேணடும்.

இச்செயற்பாடுகளை துரிதமாக முன்னெடுத்துச் செல்ல சபைகளின் செயலாளர்கள் உரிய நடவடிக்கைகளை முன்வைத்து செயற்படுத்துவதன் ஊடாக அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு உள்ளூராட்சி சேவைகள் துரிதமாக முன்னெடுக்கப்படலாம் என அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி நியமனங்கள் முறையாக இடம்பெறுவதனை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் கண்காணித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (92)

# பற்றைகள் சூழ்ந்த வீதியை புனரமைக்க கோரிக்கை



(வவுனியா)

நெடுங்கேணி, கீரிசுட்டான் கிராமத்திலுள்ள உள்வீதிகள் அனைத்தும் நீண்டகாலமாக பற்றைகளால் சூழப்பட்டுள்ளமையால் போக்குவரத்து மேற்கொள்ள முடியாதுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கிராம அலுவலரிடம் முறையிட்டபோதிலும் இதுவரை எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதனால் இப்பாதையூடாக பயணம் செய்யும்போது இரு வாகனங்கள் விலத்திச்செல்ல முடியாத அளவுக்கு பற்றைகள் வளர்ந்துள்ளன.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி இவ்வீதியை சீர்செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (40)

# பாலத்திற்குள் பாய்ந்த இ.போ.ச. பேருந்து



(வவுனியா)

திருகோணமலையிலிருந்து 45 பயணிகளுடன் யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த இ.போ.ச. பஸ் வவுனியா, சாந்சோலை பகுதியில் ஏ - 9 வீதியில் பாலத்திற்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் பஸ் சாரதி சிறு காயங்களுக்கிலக்கானார்.

பயணிகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

ஆட்டோ ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டவேளை ஆட்டோவை மோதிய பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பாலத்திற்குள் பாய்ந்துள்ளது.

# தொடரும் மழையால் வான் பாயும் குளங்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் இரு குளங்கள் தற்போது பெய்து கொண்டிருக்கும் மழைக்கு வான் வெள்ளம் பாய்கின்றது.

புத்துவெட்டுவானின் மருதங்குளம், மற்றும் பழைய முறிகண்டிக்குளம் ஆகிய குளங்கள் வான் பாய்கின்றன. மருதங்குளத்தின் வான்வெள்ளம் பாய்வதன் காரணமாக கிளிநொச்சியின் இரண்டாவது பெரியகுளமான அக்கராயன்குளம் நீர்மட்டம் அதிகரித்து வருகின்றது.

பழைய முறிகண்டிக்குளம் வான் பாய்வதன் காரணமாக துணுக்காயின் அம்பலப்பெருமாள்குளத்தின் நீர்மட்டம் அதிகரித்து இக்குளம் வான்பாய்வதற்கான நீர்மட்டத்தினையடைந்து கொண்டிருக்கின்றது.

மழை தொடர்ந்து பெய்து கொண்டிருப்பதன் காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பல குளங்கள் வான் பாய்வதற்கான நீர்மட்டத்தினை யடைந்து கொண்டிருக்கின்றன. (160)

# புதிய நிர்வாகம் தெரிவு

(கரணவாய்)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசத்தின் கரவெட்டி பிராந்திய கிளைக்கான புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது.

இதன்படி தலைவராக கொ.குணசிங்கம் தெரிவானார். அத்துடன் க.கந்தையா உபதலைவராகவும், த.உஷா செயலாளராகவும், அ.ரஞ்சனாமதி பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன் நிர்வாக உறுப்பினர்களாக 5 பேர் ஏகமனதாக தெரிவாகினர். இப்புதிய நிர்வாகத் தெரிவு வடமாகாண சம்மேளனத் தலைவர் தலைமையில் இடம்பெற்றது. (18)

# மண்ணில் புதையுண்டது சிவன் கோவில் தேர்



யாழ்ப்பாணம், திருநெல்வேலி நீலதட்சாயணர் சிவன் ஆலயத் தேர்த் திருவிழா நேற்றுக் காலை வெகு விமரிசையாக ஆரம்பமானது.

நேற்றுக் காலை பெய்த கடுமையான மழைக்குள்ளும் தேரோட்டம் நிகழ்ந்த காரணத்தினால், வடக்கு வீதியில் தேர்ச் சில்லு மண்ணில் புதையுண்டது.

பின்னர் ஒரு மணித்தியால முயற்சியின் பின் கிரேனின் உதவியுடன் பத்திரமாக மீட்க்கப்பட்ட தேர் தொடர்ந்து இழுக்கப்பட்டு இருப்பிடத்தை வந்தடைந்தது.

# சிறுபோக நெற்செய்கையில் எரிபந்த நோய்த் தாக்கம்

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கையில் எரிபந்த நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட விவசாய சம்மேளனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் 14,000 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையிலேயே எரிபந்த நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாகவும் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் மழை பெயதால் நெற்செய்கையுடன் சேர்த்து மேற்கொள்ளப்பட்ட சிறுதானியச் செய்கை முற்றாக அழிவடையும் என தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.



யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசத்தின் கரவெட்டி பிராந்திய சபையினரால் கலாபூஷணம் விருது பெற்ற பத்தினிப்பிள்ளை வல்லிபுரம் அண்மையில் கௌரவிக்கப்பட்டார். சமாசத்தின் தலைவர் செ.இலகுநாதன் இதன்போது அம்மையாரை கௌரவித்தார். (18)

# அனர்த்த பாதுகாப்பு தொடர்பில் பாடசாலைகளுக்கிடையே போட்டி

(யாழ். நிருபர்)

வடக்கு மாகாணத்திலுள்ள முன்னோடிப் பாடசாலைகள் 60 இற்கிடையில் அனர்த்தப் பாதுகாப்புக் கல்வி தொடர்பான "பாதுகாப்பான பாடசாலைப் போட்டி 2015" எனும் போட்டி நடத்தப்படவுள்ளது.

GIZ/ESC நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இப்போட்டிகள் பாடசாலை தரிசிப்பின் மூலம் புள்ளியிடப்பட்டு வெற்றியீட்டும் பாடசாலைகள் தெரிவுசெய்யப்படும். இதில் வலயம், மாகாணம் ஆகிய மட்டத்தில் தெரிவுசெய்யப்படும் 3 பாடசாலைகளுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படும்.

பாடசாலை தரிசிப்பில் மேற்படி நிறுவன உத்தியோகத்தர்கள் அடங்கிய குழு மதிப்பீட்டில் ஈடுபடும். இவர்களினால் புள்ளியிடும் திட்டத்திற்கு பாடசாலையில் உள்ள அனர்த்தப் பாதுகாப்பு தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படும். இப்போட்டி தொடர்பான விபரங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பாடசாலை தரிசிப்புகள் யூன், யூலை மாதங்களில் நடைபெறவுள்ளன. (10)



# இருவேறு தமிழ்த் தேசியங்களின் சந்திப்பு

● சாலையூரான்

தமிழ்தேசியத்தை தாம் வடிவமைத்துக் கொண்டுள்ள விதம், அதனை முன் கொண்டு செல்வதில் தமக்கே உரித்தான தனித்துவம் மற்றும் தமது கடந்தகால எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை வெளிப்படுத்தி நியாயப்படுத்துவதற்கான ஒரு ஏற்பாடாக தமிழ்த் தேசியத்தின் பேரால் அரசியல் நடாத்தும் இரண்டு கட்சிகளின் சந்திப்பு 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.யூரோவில் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதற்கென பிரசன்னமாகியிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்பி எம்.ஏ.சுமந்திரன் ஆகிய இரு பிரதிநிதிகளதும் நடுவராக வண.பிதா ஜெயக்குமார் அடிகளார் கலந்து கொண்டார்.

உண்மையில் இந்த சந்திப்பு கட்சிபேதம் மற்றும் நபர் பிரச்சினைகளுக்குள் சிக்கிக் கொள்ளாது அறிவுபூர்வமாக போர்ச் சூழலிலும் அதன் பின்னரும் தமிழ்த் தேசியத்தின் பெயரால் நடாத்திய அரசியல் எந்தளவுக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளை அனுகித்தீர்ப்பதில் பலனளித்திருக்கின்றது என்பதை மதிப்பிடும் ஒரு புத்திஜீவிகளின் கலந்துரையாடலாக அமைந்திருக்க வேண்டும்.

அவ்வாறே தமிழ்த் தேசியத்தின் பெயரால் அரசியலை முன்னெடுக்க விரும்பும் ஏனைய அரசியல் தரப்புகளுக்கு ஆரோக்கியமான ஆலோசனைகளை முன்வைக்கும் ஒரு களமாகவும் இந்த ஒன்றுகூடல் அமைந்திருக்க வேண்டும்.

ஆனால் துரதிஷ்டவசமாக தத்தமது கட்சிகளின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் அவ்வாறே அதற்காக அங்கு பிரசன்னமாகி இருந்த தமது அணியின் சந்தோஷத்தை வெளிப்படுத்தும் ஒரு சந்திப்பாகவே இது அமைந்து விட்டதெனலாம்.

ஆரம்பமாக உரையாற்றிய சுமந்திரன் எம்பி மகிந்தவின் ஆட்சிக்காலத்திலும் அதன் பின்னர் ஜனாதிபதி மைத்திரி ஆட்சிக்காலத்திலும் தமிழ் கூட்டமைப்பின் நகர்வுகள் எவ்வாறிருந்தன என்பதை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிக்கு தமிழ் மக்கள் வழங்கிய ஆதரவில் தமது கட்சிக்குள்ள வகிபங்கையும் அது எந்தளவுக்கு பொருத்தமானதும் சரியானதுமென வாதிடுவதன் மூலம் தமது கட்சி வழங்கிய ஆதரவை 100வீதம் சரியானதென வாதிட்டு அதன் வழி முழு தமிழ் மக்களும் தம்முடனேயே இருக்கிறார்கள் என்பதை நியாயப்படுத்துவது அவரது உரையின் நோக்கமாக இருந்தது.

மறுபக்கத்தில் உரையாற்றிய கஜேந்திரகுமார் தமிழ் மக்களுக்கான சுயநிர்ணயத்தை வலியுறுத்தி அதற்கான அரசியலை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை முன்நிறுத்தினார்.

ஒரு நாட்டுக்குள் இனம், மொழி, மதத்தின் பெயரால் பல தேசங்கள் இருக்க முடியுமெனவும் இதுவரை சிங்கள தலைமைகளால் ஏமாற்றப்பட்டு வந்துள்ள அனுபவங்களை கவனத்திலெடுத்து தமிழர்களின் தனிவழி அரசியலை நிலைநிறுத்துவது அவரது உரையின் உள்ளடக்கமாக இருந்தது.

மத்தியில் பெருந்தேசியக் கட்சிகளுடன் தமிழ் கூட்டமைப்பினர் கடந்த காலங்களில் ஏற்படுத்திக் கொண்ட உறவில் அது எவ்வாறு தமிழ் மக்களின் நலன்களுக்கு விரோதமாக அமைந்திருந்தது என்பதை சுட்டிக்காட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உண்மையான தமிழ்த் தேசியத்தின் நோக்கங்களுக்கு விரோதமானதென்பதை நிறுவுவது கஜேந்திரகுமாரின் நோக்கமாக இருந்தது.

கூடவே மகிந்தவுக்கு பதில் இன்னொரு மகிந்தவே அமர்த்தப்பட்டிருப்பதால் இதுபற்றி தமிழ் கூட்டமைப்பினர் மார்தட்டிக் கொள்வதற்கு ஒன்றுமில்லையென்றும் இவ்வாறான ஒரு ஆதரவை மைத்திரிக்கு வழங்க தமிழ் மக்களை வழிப்படுத்தும்போது இனப்பிரச்சினை தீர்வு மற்றும் முக்கியமான விவகாரங்களில் மைத்திரியிடம் சரியான உறுதிமொழியை எடுத்துக்கொண்டு தமது ஆதரவை தமிழ் கூட்டமைப்பு வெளிப்படுத்தியிருக்க வேண்டும் என்பது கஜேந்திரகுமாரின் வாதம்.

இதற்காக இரு தரப்புக்குமிடையே இடம்பெற்ற சர்ச்சையில் இதற்கு முன்னர் இந்த இருவருக்குமிடையே இருந்து வந்த உறவில் சற்று அதிகமாக இடைவெளி ஏற்பட்டிருப்பதாகவே தோன்றுகிறது.

தமிழ்த் தேசிய முன்னணியின் ஆதரவாளர்களாக தம்மை காட்டிக்கொண்டவர்கள் எழுப்பிய கேள்விகளில் நியாயம் இருந்தபோதும் அவர்களது ஆரவாரம் ஆரோக்கியமான கருத்தாடலுக்கு இடையூறாக இருந்ததை காண முடிந்தது.

தென்னிலங்கையில் ஒன்றை கூறுவது பின்னர் அதுபற்றி வடக்கில் இன்னொன்றை கூறுவது, ரணிலுடன் இணைந்து கொண்டு சம்பந்தன் தேசியக்கொடி ஏந்தியமை, சுதந்திர தின நிகழ்வுகளில் தமிழ் கூட்டமைப்பின் பிரசன்னம், இதற்கு முந்திய ஜனாதிபதி தேர்தலில் சரத் பொன்சேகாவுக்கான தமிழ் கூட்டமைப்பின் ஆதரவு, இணைந்த வடக்கு கிழக்கிற்கான உறுதிமொழியை சம்பந்தன் காப்பாற்ற முடியாமற் போனமை, புலிகளின் ஊதுகுழலாக தமிழ் கூட்டமைப்பு செயற்பட்ட சந்தர்ப்பங்கள் என தமிழ் கூட்டமைப்புக்கெதிரான வாதங்கள் முன்வைக்கப்பட்டதில் சுமந்திரன் சற்று தடுமாறிப் போனது தெரிந்தது..

தமிழ்த் கூட்டமைப்பை மறுதலிக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வாதத்தின் பின்னால் வெளிப்படும் தீவிர தமிழ்த் தேசியத்தை சமகால நிலைமைகளில் இருந்து நோக்கும்போது சிங்கள இனவாதிகளின் இருப்புக்கும் அரசியலுக்கும் அது வழிசமைப்பதாக இருக்கும் என அதில் கலந்து கொண்ட சிலர் முணுமுணுத்ததையும் அவதானிக்க முடிந்தது.

தவிர, இதனை தமிழ் மக்கள் எந்தளவுக்கு நம்பிக்கையுடன் முன்னெடுப்பார்கள் என்பதை இந்த சந்திப்பில் கலந்து கொண்டவர்களின் கருத்துக்களில் இருந்து அறிந்து கொள்ள முடியவில்லை.

இரு கட்சிகளும் தமிழ்த் தேசியத்தை அடிப்படையாக கொண்டிருப்பதால் எதிர்காலத்தில் இணைந்து செயற்பட விடுக்கப்பட்ட அழைப்புக்கு அவ்வாறான இணைந்த செயற்பாட்டுக்கான தகுதியை தமிழ் கூட்டமைப்பிடம் இனங்காண முடியவில்லை என்பதற்கான வாதங்களில் கஜேந்திரகுமார் உறுதியாக இருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

# சுத்திகரிப்பு பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கல்



(மன்னார்)

இவ்வருடத்திற்கான வரவு செலவு திட்டத்தின் கீழ் 180 நாட்கள் கடமையாற்றிய மன்னார் நகர சபையின் சுத்திகரிப்பு பணியாளர்கள் 11 பேருக்கு கடந்த வெள்ளிக்கிழமை நிரந்தர நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் மன்னார் நகர சபை மண்டபத்தில் நியமனம் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

இதன் போது மன்னார் நகர சபையில் 180 நாட்கள் கடமை புரிந்தவர்களை உள்வாங்கும் அடிப்படையில் 11 சுத்திகரிப்பு பணியாளர்களுக்கு இவ்வாறு நிரந்தர நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.


குறித்த நிகழ்வில் மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.எதுரம், மன்னார் நகர சபையின் செயலாளர் லெனாட் பிரிட்டோ, நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், மற்றும் நகர சபை உறுப்பினர்களான இரட்ணசிங்கம் குமரேஸ், மெரினஸ் பெரேரா, செல்வக்குமாரன்(டிலான்) ஆகியோர் இணைந்து குறித்த சுத்திகரிப்பு பணியாளர்கள் 11 பேருக்கு நிரந்தர நியமனக்கடிதங்களை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறுதானியப் பயிர்ச் செய்கை அழியும் அபாய நிலை

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழ் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுதானியப் பயிர்செய்கை பெரும் அழிவுகளை எதிர்கொண்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்

தற்போது பெய்துவருகின்ற தொடர்மழை காரணமாக இவ் அழிவுகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது இவ்வாண்டு சிறுபோகத்தில் 800 ஏக்கரில் இரணைமடுக்குளத்தின் கீழ் சிறுதானியப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் தொடரும் மழையினால் சிறுதானியப் பயிர்ச்செய்கை அழிவுகளை எதிர்கொண்டுள்ளது. (160)

# ஆலய கட்டுமான பணிக்கு அடியார்களிடம் நிதி கோரல்



நாகர்கோவில் வடக்கு அருள்மிகு புலவியோடை நாகதம்பிரான் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் ஆனி மாதம் 29 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

தற்போது ஆலயத்தின் கட்டுமானப் பணிகள் யாவும் பூர்த்தியடைந்து தொடர்ந்து நடைபெற்று வரும் வர்ணப் பூச்சு வேலைகளுக்கும் நிதி போதாமையினால் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

இதற்கான நிதியை புலம்பெயர்ந்தோரிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதோடு கும்பாபிஷேக கிரியைகளை நடாத்துவதற்கு சுமார் 20 இலட்சம் ரூபா தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது ஆலயத்தில் இதுவரை நடைபெற்ற திருப்பணிகள் யாவும் அடியார்களின் பூரண பங்களிப்புடனும், ஒத்துழைப்புடனும் தான் மிகமிக துரிதமாக நடைபெற்று வந்துள்ளன. ஆகவே இனிமேலும் மிகுதியாகவுள்ள திருப்பணி வேலைகள் யாவற்றையும் பூர்த்தி செய்து குறித்த தினத்தில் ஆலய கும்பாபிஷேக விழாவை நடாத்துவதற்குத் தேவையான நிதிநன்கொடைகளை வழங்கி, பூரண ஒத்துழைப்பினை வழங்குமாறு ஆலய நிர்வாகத்தினர் குறிப்பிட்டுள்ளனர்

நிரந்தர தோல்வி, நிரந்தர துக்கம், நிரந்தர சோகம் என்று எதுவும் கிடையாது. - ஒயிட்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## கூட்டுக் கொழுப்பு நினைவா?

மக்கள் அனைவரும் ஒரே வண்ணங் கொண்டவர்கள் என்று அவர்களுடைய எண்ணங்களுக்கும் சீருடை அணிவித்து ஒரு கூட்டுக்குள் அடைக்க முற்படுவது வன்முறையின்பாற்பட்டது என்பது இன்றைய சிந்தனையாளர்களின் புரிதல்.

வித்தியாசங்களை மறுத்து அல்லது மறைத்து ஒற்றைப் பெருங்கதையாடலுக்குள் எல்லாவற்றையும் அடக்கிப் புதைத்து ஏகதன்மையதாகக் காட்டுவது வன்முறையானது; அது மனிதர்களின் விடுதலைக்கு வழிகாட்டாது என்பது புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது.

பல்வேறு போக்குகளையும் அனுமதிப்பது, சிறு சிறு கதையாடல்களையும் அடக்கிவிடாமல் அங்கீகரித்து, அவற்றை வானவில் வர்ணங்களாக அல்லது வித்தியாச மலர்களை நாரில் கட்டிய சரமாக ஒன்றுசேர்ப்பதிலேயே சமூகம் மலர்ச்சி பெறுகிறது.

மாறாக, இந்த பன்மைத் தன்மையை மறுத்து, கூட்டுப்பிரக்ஞை கூட்டுநினைவு என்பதாக எல்லோரையும் வித்தியாசங்களற்றுப் பிரதிநிதித்துவப்படுத்திவிடும் உரிமையை எடுத்துக்கொள்ள முற்படுகிறவர்கள் மற்றுமொரு ஒடுக்குமுறையை நிகழ்த்துகிறார்கள்.

தமிழக விமர்சகரான அ.மார்க்ஸ் ஓரிடத்தில் இப்படி எழுதுகிறார்: "இரண்டாயிரமாண்டு காலமாக தொட்டாலே தீட்டு என்று ஒதுக்கிவைக்கப்பட்டவர்களிடம் போய், 'கடந்தகாலம் பற்றிய அறிவும் கலாசாரம் பற்றிய கர்வமும் இல்லாத மக்கள் கூட்டம் அடிமைகளாகிவிடும்' என அறிவுரை கூற எத்தனை மூளைக்கொழுப்பு இருக்க வேண்டும்? சாதியச் சமூகங்களாகப் பிரிந்துகிடக்கும் நமக்கெல்லாம் கூட்டுநினைவு ஏது? பார்ப்பானுக்கும் பறையனுக்கும் ஒரே மெமரியா, என்ன வேடிக்கை?"

கூட்டுப்பிரக்ஞை என்ற பெருங்கதையை அவிழ்த்து விடுபவர்களும், வித்தியாசமானவர்களை எல்லாம் விளிம்புநிலைக்குத் தள்ளி எதிரிகளாக அறிவித்துவிட்டு, சீருடை அணிவிக்கப்பட்ட சமூகத்திற்குத் தாங்கள் உரிமை கோரி மற்றவர்களுக்குப் போதிக்க முற்படுகிறார்கள்.

தமிழ் மக்களின் கூட்டுநினைவு கூட்டுரிமை என்றெல்லாம் தங்களது மேட்டுக்குடி ரோச நினைவுகளை நம்மீதும் சுமத்திப் போதிக்கிறார்கள்.

குரங்கும் தொப்பி வியாபாரியும் என்ற கதை எல்லோருக்கும் தெரியும். போதிக்க வருபவர்களுக்கு நாம் அந்தக் கதையைத் திருப்பிச் சொல்லவேண்டியிருக்கிறது.

பழைய தொப்பி வியாபாரிக்கு வயதாகிவிட்டது. தன் மகனுக்கு தொப்பி வியாபார ரகசியங்களைப் போதித்து அவனைத் தயார் செய்துவிடுகிறான். மகனும் தொப்பி வியாபாரத்துக்குக் காட்டு வழியாகப் புறப்பட்டான்.

வழியிலே ஒரு மரத்தடியில் தொப்பிக் கூடையை வைத்துவிட்டு உறங்கினான். விழித்துப் பார்த்தபோது குரங்குகள் தொப்பிகளைத் திருடித் தலையில் வைத்திருப்பதைப் பார்த்தான்.

அப்பா சொல்லித் தந்த தந்திரம் அவனுக்கு நினைவுக்கு வந்தது.

உடனே தன் தலையில் இருந்த தொப்பியை எடுத்துக் கீழே வீசியெறிந்தான். அதேபோல் குரங்குகளும் தங்களது தலையில் உள்ள தொப்பிகளை எடுத்துக் கீழே வீசும் என்று நினைத்தான். ஆனால் நடந்தது வேறு.

மரத்திலிருந்து வேக வேகமாக இறங்கி வந்த குரங்குக் குட்டி ஒன்று தொப்பிக்காரன் வீசிய அந்தத் தொப்பியையும் பொறுக்கித் தன் தலையில் போட்டுக் கொண்டு அவனைப் பார்த்தது. சிரித்தபடி சொன்னது, "எங்களுக்கும் அப்பா உண்டு. தொப்பிக்காரனிடம் ஏமாறாமல் எப்படி தொப்பியை எடுக்க வேண்டும் என்று எங்கள் அப்பாவும் சொல்லித் தந்திருக்கிறார்" என்றது.

இது போலத்தான். "நாம் மட்டுமே புத்திசாலிகள், நாம் செல்லும் வழிதான் சரி. நாம் மட்டுமே புத்திமான்கள்... ஏனையவர்கள் எல்லாரும் முட்டாள்கள்!" என நம்மிலும் சிலர் நினைத்துக் கொள்கிறார்கள்.

- ஆசிரியர்

# மாகாண அதிகாரங்களை தாருங்கள்
## கிழக்கில் இருந்தும் கோரிக்கை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்துக்கான அனைத்து அதிகாரங்களையும் அரசு வழங்கும் போது தான் கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களின் அபிலாஷைகளை சரிவர செய்து கொடுக்க முடியும் என நிந்தவூர் பிரதேச சபை திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில்,

இன்று மக்கள் கேட்பவை, நினைப்பவை நடக்கவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. இதற்குக் காரணம் அதிகாரங்கள் குறைவாக வழங்கப்பட்டிருப்பதே, அதிகாரங்கள் சரிவர வழங்கப்பட வேண்டும் அதற்காக மத்திய அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கிழக்கு மாகாணத்துக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படும் பட்சத்தில் மக்கள் பணிகள் இன்னும் சிறப்படையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

கிழக்கு மாகாணத்தில் பெறப்படும் வரிப்பணம் கிழக்கு மக்களின் தேவைக்குப் பயன்படுத்தப்படவேண்டும். இன்று கிழக்கு மாகாணத்தில் இருக்கும் தேவைகளை செய்து முடிக்க தேவையான நிதி போதியளவில் இல்லை.

எனவே கிழக்கில் இருந்து வரிகள் மூலம் பெறப்படும் நிதிகள் கிழக்குக்கே கிடைக்குமாக இருந்தால் அதன்மூலம் பாரிய வேலைப்பாடுகளை செய்து கிழக்கை அபிவிருத்தி செய்ய ஓரளவேனும் முடியும்.

கிழக்கு மாகாணம் கடந்த 30 வருடத்துக்கு மேற்பட்ட யுத்த அழிவுகளில் பெரிதும் பாதிக்கப்பட்டு பல இன்னல்களைச் சந்தித்துள்ளது. எனவே உடனடியாக கிழக்கை கட்டியெழுப்புவது என்பது பாரிய கஷ்டமானவிடயம்.

எனவே எப்படியாயினும் கிழக்கு மக்களின் அபிலாஷைகளை சரிவர நிறைவேற்றிக் கொடுக்க பெரும் முயற்சி எடுத்து வருகின்றேன் பல வழிகளிலும் அனைவரும் ஒத்தாசை வழங்க வேண்டும் என்று தெரிவித்தார்.

நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளார் எம்.ஏ.தாஹீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நகர அபிவிருத்தி நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சருமான ரவூப் ஹக்கீம், கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட், மற்றும் விஷேட அதிதிகளாக திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் பைஷல் காசிம், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்,ஐ.மன்சூர் மாகாண சபை உறுப்பினர்களான ஆரிப் சம்சுதீன் ஏ.எல்.எம்.நஸீர், ஏ.எல்.தவம்.ஷிப்லி பாறூக், ஆகியோருடன் பிரதேச சபை தவிசாளர்கள், உறுப்பினர்கள், நிர்வாகத்தினர் கட்சியின் முக்கிய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# தயாராகிறது குற்றப்பத்திரிகை
## கோத்தாவுக்கு எதிராக

(கொழும்பு)

உரிய கேள்விப்பத்திரங்களை கோராமல், நான்கு மிக்-27 ரக விமானங்களை கொள்வனவு செய்தமை தொடர்பில், முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவுக்கு எதிராக குற்றவியல் குற்றச்சாட்டு சுமத்தப்படவுள்ளது.

நிதிமோசடி தவிர்ப்பு பிரிவு பொலிஸாரின் விசாரணைக்கு எதிராக கோத்தாபய , நீதிமன்ற இடைக்கால தடையுத்தரவை பெற்றுள்ள நிலையிலேயே குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்படவுள்ளது.

2006ஆம் ஆண்டு 14,676,000 டொலருக்கு இந்த மிக் விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இந்தக் கொள்வனவின் போது எந்த சான்றிதழ்கள், ஆவணங்கள் எதுவும் பரிமாறிக்கொள்ளப்படவில்லை.

அத்துடன் இந்த விமானங்கள், தமது பயன்பாட்டுக் காலத்தை இழந்த விமானங்களாகும்.

இந்தக்கொள்வனவு காரணமாக அரசாங்கத்துக்கு பாரிய நட்டம் ஏற்பட்டது. இந்த விமானங்கள், உக்ரேனிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட போதும் அதற்கான கொடுப்பனவு இலண்டனில் உள்ள பெலிமிஸ்ஸா என்ற நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் இந்த பெலிமிஸ்ஸா நிறுவனம், பிரித்தானியாவில் பதிவு செய்யப்படவில்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை அவான்ட்காட் மிதக்கும் கப்பல் தொடர்பான விசாரணைகள் முடிவடைந்துள்ளன.

இதன்படி சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்த குற்றச்சாட்டும் பணச்சலவை குற்றச்சாட்டும் கோத்தாபய மீது சுமத்தப்படவுள்ளன.

# அறக்கட்டளை நிதியில் மோசடி
## நீதியமைச்சர் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

பிரதான அறக்கட்டளை திணைக்களத்திலிருந்து முன்னாள் அரசியல்வாதி ஒருவருக்காக பெருந்தொகை பணம் வழங்கியமை தொடர்பான தகவல் கிடைத்துள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குறித்த அரசியல்வாதிக்காக சிங்கப்பூர் மவுண்ட் எலிசபத் வைத்தியசாலைக்கு 220 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு பணம் செலுத்தப்பட்டமைக்காக பற்றுச்சீட்டுகள் எதுவும் இல்லை.

செயலாளர் ஒருவரின் கோரிகைக்கு அமைவாக ஆவணங்களை நீக்கிவிட்டு 12 இலட்ச பெறுமதியான காசோலை ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது. எனினும் கட்டணம் செலுத்தப்பட்டதற்கான பற்றுச்சீட்டுகள் காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது மூடப்பட்டுள்ள வங்கி ஒன்றில் 100 மில்லியன் பணம் வைப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை பிரதான அறக்கட்டளை திணைக்களத்தின் 330 மில்லியன் ரூபாவுக்கு என்ன நடந்தது எனவும் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

# பணம் ஈட்டுவதிலேயே குறி
## கடந்த ஆட்சியாளரை சாடுகிறார் ரணில்

(கொழும்பு)

கடந்த அரசாங்கம் சவப்பெட்டியில் கூட பணம் சம்பாதிக்க முயற்சித்தது என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கம் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்த போதிலும், அவற்றுக்காக பணம் செலுத்தப்படவில்லை. பணம் செலுத்தும் பொறுப்பு இந்த அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்தவர்கள் எல்லா விடயங்களிலும் பணம் சம்பாதிக்க முயற்சித்தனர். சவப்பெட்டியில் கூட பணம் சம்பாதிக்கவே முயற்சித்தனர்.

ஜூன் மாதத்தில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

20 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு கட்சிகளுக்கு இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகின்றது.

எனினும் புதிய தேர்தல் முறைமை ஒன்றுக்கு மக்கள் பழகுவதற்கு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் கால அவகாசம் தேவைப்படும்.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதனை அரசியல் பழிவாங்கல் என சிலர் பிரசாரம் செய்து வருவதாக நேற்றுமுன்தினம் இரவு தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற போது பிரதமர் தெரிவித்துள்ளார்.

**எல்.ரீ.ரீ.ஈயின் இந்த வெற்றிகரமான வளர்ச்சிக்கு வேண்டி இலங்கை வாழ் தமிழர்கள் மிகப் பெரிய விலை கொடுக்க வேண்டியிருந்தது. எல்.ரீ.ரீ.ஈ செங்குத்தாக மேல் நோக்கி வளர்ச்சி பெற்றது ஆனால் இலங்கைத் தமிழர்கள் கிடையாக கீழ்நோக்கிப் போனார்கள். எல்.ரீ.ரீ.ஈ மற்றும் அதன் பிரசாரகர்கள் எப்போதும் மறுத்து வருவதும் கடந்த காலத்தில் அதைப்பற்றிச் சொன்னபோது கேட்க விரும்பாததுமான சங்கடமானதும் விரும்பத் தகாததுமான உண்மை இது.**

# மே 2009இல் எல்.ரீ.ரீ.ஈ யின் இராணுவ தோல்வி – 2

**டி.பி.எஸ் ஜெயராஜ்**

**ரீ.யு.எல்.எப்** மற்றும் எல்.ரீ.ரீ.ஈ என்பனவற்றின் இலக்குகள் காகிதத்தில் ஒரே மாதிரியானவைகளாகவே இருந்தன. நடைமுறையில் மித வாதமானதாக இருந்த ரி.யு.எல். எப் விட்டுக் கொடுப்பதற்கு இணக்கம் தெரிவித்து இறுதியாக மாவட்ட அபி விருத்தி சபைகளை தமிழ் ஈழத்துக்கு ஒரு மாற்றீடாக கருதி ஏற்றுக் கொண்டது. பெடியன்கள் என குறிப்பிடப் படும் போர்க்குணம் கொண்ட இளைஞர்கள் இதை ஏற்றுக்



கொள்ளாமல் தொடர்ந்தும் தங்கள் இலக்கான தமிழ் ஈழத்தை அடைவதை வன்முறை வழிகளுடாக தொடர முடிவு செய்தார்கள். தமிழர்களுக்கு எதிரான ஜுலை 1983 கலவரம் மிதவாத மற்றும் போராளி தமிழர்களை தற்காலிகமாக இணைப்புக்கு கொண்டுவரும் ஒரு வாய்க்காலாக மாறியது.

இதற்கிடையில் எல்.ரீ.ரீ.ஈ இரண் டாகப் பிளவுபட்டது. பெருமள விலான அங்கத்தவர்கள் உமாம கேஸ்வரன் தலைமையில் பிரிந்து சென்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) எனும் அமைப்பை உருவாக் கினார்கள். நாகராஜா, ஐயர் போன்ற சிலர் தங்கள் சொந்த வழியில் சென்றார்கள். அசல் எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களில் ஒரு கையளவு தொகையினரே பிரபாகரனுக்கு விசுவாசமாக இருந்தனர். விரக்தியுற்ற பிரபா கரன் இந்தியாவுக்குச் சென்று அங்கு சிலகாலம் தங்கியிருந் த்தார். அவர் இல்லாத நேரத்தில் சீலன், மாத்தையா மற்றும் ரகு ஆகிய மூவர் குழு இலங்கை யில் எல்.ரீ.ரீ.ஈயினை பராமரித்து வந்தது.

ஒரு கட்டத்தில் எல்.ரீ.ரீ.ஈ அதன் பலம் குறைந்த அணியினருடன் இணைந்து தங்கத்துரை மற்றும் குட்டிமணி தலைமையின் கீழ் இயங்கும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்துடன்(ரெலோ) ஒன்றிணைந்து பணியாற்ற ஆரம்பித் திருந்தது. பிரபாகரன் தனக்கு கீழ் இருந்த எல்.ரீ.ரீ.ஈயின் எச்சங்களை ரெலோவுடன் இணைத்து புதிதாக ஒரு அமைப்பை உருவாக்க ஒரு காலத்தில் விரும்பினார். எனினும் இது நடைபெற வில்லை. ரெலோ தலைவர்களான தங்கத்துரை, குட்டிமணி மற்றும் ஜெகன் ஆகியோர் 1981இல் கடற்படையினரால் கைது செய்யப்பட்டது எல்.ரீ.ரீ.ஈ - ரெலோ கூட்டுறவுக்கு முடிவு கட்டியது.

இப்போது எல்.ரீ.ரீ.ஈ பிரபா- கரனின் கீழ் சுதந்திரமாக இயங்கத் தொடங்கியது, அவர் அதன் தலைவர் மற்றும் இராணுவ தளபதி ஆகிய இரண்டு பொறுப்புகளையும் வகித்து வந்தார். பின்னர் சாள்ஸ் அன்ரனி எனும் சீலன் இராணுவப் பிரிவுக்கு தலைமை யேற்றார். ஜுலை 1983ஆம் ஆண்டளவில் எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களின் எண் ணிக்கை 30 ஆக இருந்தது. அதில் 23 முழுநேர அங்கத்தவர்களும் மற்றும் ஏழு பகுதி நேர அங்கத்தவர்களும் இடம்பெற்றிருந்தார்கள். வாழ்வின் பல மட்டங்களையும் மற்றும் பல வயதை யும் சேர்ந்த பல உதவியாளர்களும் இருந்தார்கள்.

1983, ஜுலை 23இல் திருநெல்வேலியில் கண்ணிவெடி மூல்மாக எல்.ரீ.ரீ.ஈ, 13 படை வீரர்களைக் கொன்றது. இதன் விளைவாக 1983 தமிழர் விரோத வன்முறைகள் தோன்றின. தமிழ் இளைஞர்கள் போராளி இயக்கங்களில் இணைந்து தமிழீழத்துக்காகப் போராடு வதற்கு தன்னிச்சையாகவே இணையும் ஒரு வேகம் உருவானது. இந்தியா இயக்கங்களுக்கு பயிற்சி மற்றும் ஆயு தங்கள் வழங்க ஆரம்பித்தது. தமிழீழத் துக்கான போராட்டம் பல விநோதமான திருப்பங்களுக்கும் மற்றும் விசித்திரமான மாற்றங்களுக்கும் உள்ளானது. இயக்கங்களிடையே பரஸ்பர நாசம் விளைவிக்கும் மோதல்கள் உருவாயின.

எல்.ரீ.ரீ.ஈ மேலாதிக்கமுள்ள தமிழ் குழுவாக மாறியது.

1987,ஜுலை 27இல் கையெழுத்தான இந்திய - இலங்கை ஒப்பந்தம் தமிழ் அரசியலில் கடல் போன்ற பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. எல். ரீ.ரீ.ஈ தவிர ஏனைய அனைத்து தமிழ் கட்சிகள் மற்றும் அமைப்புகள் என்பன அதை ஏற்றுக்கொண்டன மற்றும் தமிழீழத்துக்கான போராட்டத்தை கைவிட்டு அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின்படி வழங்கப்படும் அதி- காரப் பரவலாக்கத்தை ஏற்றுக் கொள்வதை தெரிவு செய்தன.

ஆரம்பத்தில் எல்.ரீ.ரீ.ஈயும் அதற்கு சம்மதித்து சில ஆயுதங்களை கையளித்தது மற்றும் ஆரம்பகட்டத்தில் ஒரு ஊக்கத் தொகையாக புது தில்லியிடமிருந்து ஒரு மாதாந்த கொடுப்பனவை பெற்றுக்கொள்ளவும் அது இணங்கியிருந்தது. எனினும் புலிகள் விரைவிலேயே தங்கள் பாதையை மாற்றிக்கொண்டு விரோத போக்கை பின்பற்றி துணிவுடன் இந்திய இராணுவத்தையே எதிர்க்கத் தொடங்கினார்கள்.

தொடர்ந்து வந்த வருடங்களில் எல். ரீ.ரீ.ஈக்கும் மற்றும் கொழும்பில் இருந்த பல்வேறு அரசாங்கங்களுக்கும் இடை யில் பல சுற்று சமாதானப் பேச்சுக்கள் நடந்தேறியதைக் காண முடிந்தது. அவை எதுவும் வெற்றியளிக்கவில்லை மற்றும் நாடு முடிவற்ற போர்கள் மற்றும் இடையிடையே தற்காலிகமாக போரற்ற மயக்கநிலை என்பனவற்றால் பாதிக்கப்பட்டது.

இந்த இடைக்காலத்தில் எல்.ரீ.ரீ.ஈ சில குறிப்பிட்ட சம்பவங்களில் அபரி- மித வளர்ச்சியைப் பெற்றிருந்தது. 1983இல் இருந்த இரட்டை இலக்க அங்கத்துவ எண்ணிக்கை ஐந்து இலக்க எண்ணிக்கையை எட்டியது. எல்.ரீ.ரீ.ஈ ஒரு நாடு கடந்த அமைப்பாக மாறியது தமிழ் புலம் பெயர்ந்தவர்கள் பரந்திருந்த இடமெல்லாம் அதன் முன்னணி/கிளை அமைப்புகள் உருவாயின. 1990 முதல் வடக்கு மற்றும் கிழக்கில் கணிசமான சில பகுதிகளை எல்.ரீ.ரீ.ஈ தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதில் வெற்றி கண்டது. மேற்குறிப்பிட்ட நிலப்பகுதி மே 2009இல் யுத்தம் முடிவுக்கு வரும் வரை படிப்படியாக மாற்றம் பெற்று வந்தது. புலிகளின் யுத்த நிலையின் தன்மைக்கு ஏற்றபடி கூடியும் மற்றும் குறைந்து வந்தது. இருந்தும் பல வருடங்களாக எல். ரீ.ரீ.ஈயின் கட்டுப்பாட்டுப் பகுதி மாறத்தக்க ஒரு கோளமாக இருந்து வந்தது. இந்த எல்.ரீ.ரீ.ஈ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புலிகள் காவல் நிலை யங்கள், நீதிமன்றங்கள், இறைவரி அலுவலகங்கள், தொலைக்காட்சி, வானொலி, திரைப்பட பிரிவுகள், பத்திரிகைகள், வங்கிகள், குடிவரவு குடியகல்வு அலுவலகங்கள் வியாபார நிலையங்கள் பண்ணைகள் போன்ற பலவிதமான கட்டுமானங்களையும் நிறுவியிருந்தார்கள். அவர்கள் தங்கள் சொந்த சட்டங்களைக்கூட வரைவு செய்திருந்தார்கள்.

எல்.ரீ.ரீ.ஈயினது இராணுவமும் வளர்ச்சி யடைந்தது. புலிகள், காலாட் படையணி, பெண்கள் படையணி, கமாண்டோ பிரிவுகள் மற்றும் கண்ணிவெடிகளை புதைப்பதற்கு, பீரங்கிகள் மற்றும் மோட்டார்களை இயக்குவதற்கு, தாங்கிகள் மற்றும் கவசவாகனங்களை எதிர்ப்பதற்கு என பல்வேறு விசேட பிரிவுகளையும் ஏற்படுத்தியிருந்தார்கள். கடற்புலிகள் என்கிற கடற்படைப் பிரிவையும் மற்றும் வான்புலிகள் என்கிற வளர்ந்துவரும் ஒரு விமானப் படையையும் எல்.ரீ.ரீ.ஈ உருவாக்கி இருந்தது. எல்.ரீ.ரீ.ஈயிடம் பல கடல்வழி கப்பல்கள் மற்றும் சில குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சிறிய ரக விமானங்களும் இருந்தன.

எல்.ரீ.ரீ.ஈயினர் தமிழ் புலம் பெயர்ந்த வர்களை தளமாகக் கொண்டு ஒரு விரி- வான வெளிநாட்டு வலையமைப்பையும் அமைத்திருந்தார்கள். பிரசாரம் மேற்கொள்வதற்காக பல்வேறு ஊடக அமைப்புகளும் மற்றும் நிதி சேகரிப்பதற்காக எண்ணற்ற ஆவலர்களையும் அது ஈடுபடுத்தி வந்தது. பல மேற்கத்தைய நாடுகளில் குறுகிய கால அவகாசத்தில் மாபெரும் வெகுஜன ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்யும் திறன் புலிகளிடம் இருந்தது. பல, கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளில் எல்.ரீ.ரீ.ஈ பல வர்த்தக நிறுவனங்களையும் நடத்தி வந்தது. மேலும் அவர்கள் வெளிநாடுகளில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்களை இலங்கையின் வடக்கிற்கு கொண்டு வருவதற்காக அவர்கள் ஒரு கப்பல் தொகுதியையும் நடத்தி வந்தார்கள். சுருங்கச் சொல்வதானால் 83இற்கு பின்னான வருடங்களில் எல். ரீ.ரீ.ஈயின் வளர்ச்சி தனித்துவமானதாக இருந்தது.

இந்த வெற்றிகரமான வளர்ச்சிக்கு வேண்டி இலங்கை வாழ் தமிழர்கள் மிகப் பெரிய விலை கொடுக்க வேண்டியிருந்தது. எல்.ரீ.ரீ.ஈ செங்குத் தாக மேல் நோக்கி வளர்ச்சி பெற்றது. ஆனால் இலங்கைத் தமிழர்கள் கிடையாக கீழ்நோக்கிப் போனார்கள். எல்.ரீ.ரீ.ஈ மற்றும் அதன் பிரசாரகர்கள் எப்போதும் மறுத்து வருவதும் கடந்த காலத்தில் அதைப்பற்றிச் சொன்னபோது கேட்க விரும்பாதது மான சங்கடமானதும் விரும்பத் தகாததுமான உண்மை இது.

(தொடரும்)

# அடிப்படை உரிமை மீறல் மனு தயாராகிறார் பசில்

'திவிநெகும' திணைக்கள நிதியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் மூன்று அதிகாரிகள், அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்யவுள்ளனர்

தமது கைதை ஆட்சேபித்தே இந்த மனு தாக்கல் செய்யப்படவுள்ளது.

குறித்த நால்வருக்கு எதிராக போதுமான ஆவணங்கள் இருக்கிறதா? என்ற சந்தேகம் உள்ள நிலையிலேயே இந்த மனுத்தாக்கல் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பசில் ராஜபக்ஷவும் மற்றைய மூவரும் கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி நிதி மோசடி தடுப்பு பிரிவினால் கைதுசெய்யப்பட்டனர். இந்த நிலையில் அவர்கள் விளக்கமறியல் நாளை மறுதினம் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது

# இறுதி யுத்தத்தின் கடைசி நாட்கள்

## உள்ளதை உள்ளபடி உரைத்தேன்



இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் விசேட பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம்,யுத்தத்தின் இறுதி தருணங்களின் இடம்பெறற சம்பவங்கள் மற்றும் வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்ததாக தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் இறுதி தருணங்கள் மற்றும் வெள்ளைக்கொடி விவகாரம் குறித்து நான் அறிந்தவற்றை எல்லாம் ஐ.நா விசாரணைக்குழுவிற்கு தெரிவித்தேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் இறுதித் தருணங்கள் குறித்த நம்பகத்தன்மை மிக்க தேசிய அல்லது சர்வதேச ஆணையத்தின் முன்பாக தான் அறிந்த அனைத்தையும் தெரிவிப்பதற்கு தயார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

செப்ரெம்பரில் வெளியாகவுள்ள இலங்கை குறித்த அறிக்கை சாதரணமாக காணப்படாது, கடுமையானதாக விளங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தக்குற்றங்களில் ஈடுபட்ட எவர் என்றாலும், தங்கள் மீது கடும் குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் அறிக்கையை எதிர்பார்க்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

பால்க்கன்ஸ், ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளில் பொறுப்புக்கூறலுக்கு சிறிது காலம் பிடித்தது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அனைவரும் சிறிது பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டும்.

இறுதியில் யுத்த குற்றவாளிகள் பகிரங்கப்படுத்தப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவார்கள், எந்த வித தயக்கமும் இன்றி கண்டிக்கவேண்டும் இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் ஏற்றுக்கொள்ள முடியாத யுத்த குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர் என்பது தெளிவான விடயம்.

உண்மையை நிலை நாட்டுவதே அவசர விடயம். உயிர்தப்பியவர்கள் தங்கள் குடும்பத்தவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியவேண்டும். தனது கணவன் அல்லது மகன் உயிருடன் இருப்பதை அறியாமல் பெண்ணொருவரால் எப்படி தனது வாழ்க்கையை மீள ஆரம்பிக்க முடியும்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கு நான் தயாராக இருக்கிறேன், எனினும் நாடாளுமன்ற தேர்தலிற்கு முன்னர் வரமாட்டேன், அவ்வாறு வந்தால் அதனை சிலர் பயன்படுத்த முனையக்கூடும் என அவர் தெரிவித்துள்ளார்

# அரசியல் அமைப்பு சபை மிக விரைவில் உதயம்

அரசியல் அமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைவாக அரசியல் அமைப்புச் சபை நிறுவுவதற்கு, எதிர்வரும் வாரத்திற்குள் பிரதிநிதிகளை பெயரிடுமாறு, சபாநாயகர் அரசியல் கட்சிகளிடம் கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை 19 ஆவது திருத்தச் சட்டத்தில் கையொப்பமிட்டு அந்தச் சட்டத்தை சபாநாயகர் சட்டபூர்வமாக்கினார்.

சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுமுன், அரசியல் அமைப்புச் சபை நிறுவப்பட வேண்டும்.

அரசியல் அமைப்புச் சபைக்கு பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், நாடாளுமன்றின் சிறு கட்சி உறுப்பினர்கள் நால்வர் மற்றும் நாடாளுமன்றிற்கு வெளியே சிவில் சமூகத்தைச் சேர்ந்த மூவர் என்ற அடிப்படையில் நியமிக்கப்படுவர்.

அரசியல் அமைப்புச் சபையில் மொத்தமாக பத்து பிரதிநிதிகள் அங்கம் வகிப்பார்கள்.

அரசியல் அமைப்புச் சபை நிறுவப்பட்டதன் பின்னர், தேர்தல் ஆணைக்குழு, அரச சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, கணக்காய்வு ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு உள்ளிட்ட பத்து சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்படவுள்ளன.

# இனியும் வேண்டாம் அந்த சந்திப்பு

(கொழும்பு)



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இடையில் மீண்டும் நேரடி கலந்துரையாடல்கள் இடம் பெறாதென ஜனாதிபதி செயலக தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

மகிந்த ராஜபக்ஷவுடன் நேரடி கலந்துரையாடல்கள் மீண்டும் இடம் பெறாதென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம், சமகால ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவிடம் கூறவேண்டிய அனைத்தும் முதல் கலந்துரையாடலில் ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி செயலக தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

எப்படியிருப்பினும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை பிளவுபடுவதற்கு இடமளிக்கப்போவதில்லை என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியல் ரீதியில் பலமடைய இடமளிக்க கூடாதென பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஜனாதிபதியிடம் கோரிக்கை ஒன்றினையும் முன்வைத்துள்ளார்.

# பொதுத் தேர்தலில் மும்முனைப் போட்டி

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு பிரதான கட்சிகள் மூன்று கூட்டமைப்புக்களில் போட்டியிட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக இம்முறை பொதுத் தேர்தல் மும்முனைப் போட்டியாக அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி சில கட்சிகளை இணைத்துக் கொண்டு ஓர் கூட்டணி அமைக்க உள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி, தேசிய தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட உள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி புதிய கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் முனைப்புக்களில் ஈடுபட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய ஜனநாயகக் கட்சி ஜே.வி.பி.யிலிருந்து பிளவடைந்து சென்ற தரப்புக்கள், தமிழ் முஸ்லிம் தொழிற்சங்கங்கள் இரண்டு ஆகியன இவ்வாறு சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவது குறித்து பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிச் சென்ற சில சிரேஷ்ட உறுப்பினர்களும் சுதந்திரக் கட்சியின் ஊடாக போட்டியிட விருப்பம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவான தரப்பினர் கூட்டணி ஒன்றை அமைத்து போட்டியிடத் தீர்மானித்துள்ளனர்.

மஹாஜன ஐக்கிய முன்னணி தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, ஸ்ரீலங்கா மஹாஜன கட்சி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தேச விடுதலை மக்கள் கட்சி, ஆகியன இவ்வாறு புதிய கூட்டணி ஒன்றை அமைப்பது தொடர்பில் பேச்சுவார்த்தை நடாத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ஸ்தம்பிக்கும் அபாயம்

(கொழும்பு)

இலஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளர் எல்.கே.விமல சந்திர இராஜினாமா செய்துள்ளதாக, அந்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஷி டயஸ்விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நிறைவேற்றப்பட்டுள்ள 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைய புதிய ஆணைக் குழுவை நியமிக்க இடமளிக்கும் வகையில் அவர் இராஜினாமா செய்துள்ளதாக தில்ருக்ஷி டயஸ்விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

19 ஆவது திருத்தச் சட்டத் பெறாமையால், ஆணைக்குழுவின் எதிர்கால செயற்பாடுகள் குறித்து தன்னால் கூற இயலாது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்போது பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் குறித்த நடவடிக்கைகளை தொடர்ந்தும் முனனெடுக்க முடியும் என கூறிய தில்ருக்ஷி டயஸ்விக்ரமசிங்க, புதிதாக விசாரணைகளை ஆரம்பிக்க முடியாது எனவும் கூறியுள்ளார்.

எனினும் மக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டி

# மகிந்த மீதான கொலை முயற்சி புலிகளுக்கு துணை போனது யார்?

## கசிகிறது தகவல்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை படுகொலை செய்யும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முயற்சிக்கு, இரண்டு முன்னாள் அமைச்சர்கள் ஒத்துழைப்பு வழங்கியதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை தற்கொலை குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகி படுகொலை செய்யத் திட்டமிட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் முக்கியமான அமைச்சுப் பதவிகளை வகித்து வந்த இரண்டு அமைச்சர்கள் இந்த முயற்சிக்கு, புலிகளுக்கு உதவியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த இரண்டு முன்னாள் அமைச்சர்களும் விரைவில் கைது செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

போராளிகள் மற்றும் அவர்கள் பயன்படுத்தவிருந்த தற்கொலைக் குண்டுகள் ஆகியனவற்றை வடக்கிலிருந்து கொழும்பிற்கு எடுத்துச்செல்ல இந்த முன்னாள் அமைச்சர்கள் உதவியுள்ளனர்.

கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருந்து பின்னர், ஆளும் கட்சியில் இணைந்து இந்த இருவரும் அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சுப் பதவிகள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கொலை முயற்சியுடன் அரசாங்க நிறுவனமொன்றின் முன்னாள் பணிப்பாளர் ஒருவருக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண மக்கள் பிரதிநிதிகள் உழைக்க வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு



தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதனால் மக்கள் பிரதிநிதிகள் மிகக்கடுமையாக உழைக்கவேண்டும் கடந்த ஐந்து ஆண்டுகளாக நாம் அந்த உழைப்பை செலுத்தியதனூடாக மக்களின் வாழ்நிலைகள் முன்னேற்றம் கண்டுள்ளன. ஆனால் மக்களின் உரிமைக்காக மட்டும் செயற்படுவதாகக் கூறிக்கொண்டிருப்பவர்கள் இதுவரை ஒரு படியேனும் முன்னேறவில்லை அதற்காக அவர்கள் உழைக்கவும் இல்லை மாறாக வெளிநாட்டவரிடம் மகஜர் கையளிப்பதிலேயே காலங்களை கழித்துள்ளனர் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று கல்மடுநகரில் மக்களுடன் கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மக்கள் இன்று தமது தேவைகளுக்கு தீர்வுகாண்பது தொடர்பாக சிந்திக்க வேண்டிய கட்டத்திற்கு வந்துவிட்டனர். கடந்த காலங்களில் யுத்தத்தால் மக்கள் எதிர்கொண்ட வலிகளிலிருந்து அவர்களை மீட்டெடுக்க வேண்டும் என்ற நோக்கிலேயே நாம் கடந்த ஐந்து வருடங்களாக மிகக்கடினமாக உழைத்தோம் அதற்கூடாக பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் இன்னும் மக்களின் பல தேவைகளுக்கு தீர்வுகாணப்படவில்லை.

மக்களை தந்திரோபாயமாக ஏமாற்றுபவர்களுக்கு தொடர்ந்தும் வாக்களிக்கப்பட்டு வருவதனால் ஏமாற்றங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன உலகத்தின் பெயராலும் அமெரிக்கா ஐ.நா ஜெனீவா போன்றவற்றின் பெயராலும் தமிழர்களின் ஒற்றுமைப்பலத்தை வெளிப்படுத்துவதென்றும் தமிழ் உணர்வுகள் பற்றி பேசியும் மக்களிடமிருந்து வாக்குகள் அபகரிக்கப்படுகின்றன.

உலகில் தமிழர்களின் வரலாற்றிலேயே இவ்வாறு தொடர்ந்தும் ஏமாற்றங்களை எதிர்கொள்ளும் வரலாறு தொடர்கின்றது.

ஆனால் நாட்டின் தென்பகுதியிலோ அல்லது உலகத்தின் வேறு நாடுகளிலோ இவ்வாறு தொடர்ச்சியாக ஏமாற்றப்படும் வரலாறு இல்லை.

ஆகவே மூலைச்சலவை செய்யப்படுவதனூடாக அதற்கு கட்டுப்பட்டு வாக்களிக்கும் நிலைமை எமது மக்கள் மத்தியிலிருந்து மாற்றம் பெறவேண்டும் சுயமான சிந்தனைகளின் அடிப்படையில் வாக்களிக்கும் நிலைமை உருவாக வேண்டும்.

இன்று மக்கள் எதிர்கொள்ளும் அனைத்து விளைவுகளுக்கும் ஏற்படுத்தப்படுகின்ற அரசியல் சூழலே காரணமாக அமைகின்றது.

எனவே சரியான அரசியலை மக்கள் அறிந்து வாக்களிக்க வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின்போது கல்மடுப்பகுதி மக்கள் பிரதிநிதிகளும் மக்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் கலவன் பாடசாலைக்கு கணனி உபகரணங்கள் கையளிப்பு



(மன்னார்)

மன்னார், முசலி கல்விக் கோட்டத்திற்குட்பட்ட கூழாங்குளம் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலைக்கு பல இலட்சம் ரூபா பெறுமதியான கணனி உபகரணங்களை ஹுனைஸ் பாறூக் எம்.பி கையளித்தார்.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட பிரதான அமைப்பாளருமான சட்டத்தரணி ஹுனைஸ் பாறூக் முசலி கல்வி கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு விஜயம் செய்திருந்தார். இதன் போது பல இலட்சம் ரூபாய் பெறுமதியான உயர் ரக கணனி மற்றும் தளபாடங்களை இப்பாடசாலை அதிபரிடம் கையளித்தார். இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட பெற்றோர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (160)

# திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் பாப்பாமோட்டையில் திறப்பு



உலக வங்கியின் நிதி உதவியுடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையினால் மன்னார் பாப்பாமோட்டை பகுதியில் அமைக்கப்பட்டு வந்த திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் . கடந்த வெள்ளிக் கிழமை மாலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு மன்னார் நகர சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி ஒதுக்கீடு செய்த 47 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் கீழ் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையினால் பாப்பாமோட்டை பகுதியில் 4 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட காணியில் பசளை தயாரிப்பதற்கான திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் அமைக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் குறித்த நிலையம் கடந்த வெள்ளிக் கிழமை மாலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு மன்னார் நகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், உப தலைவர்.ஜேம்ஸ் ஜேசுதாஸ், நகர சபை உறுப்பினர்கள், மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஏ.துரம் மன்னார் நகர சபையின் செயலாளர் லெனாட் பிரிட்டோ.தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மன்னார் - வவுனியா மாவட்டங்களுக்கான பொறியியலாளர் உதயசீலன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்

# மானிய உரங்கள் வழங்கவில்லை முல்லை.விவசாயிகள் விசனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வவுனிக்குள நீர்ப்பாசனத்திணைக்களப் பிரிவின் கீழ் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மானிய உரங்கள் வழங்கப்படவில்லையென விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சிறுபோக நெற்செய்கைகள் தொடங்கப்பட்டு நெற்பயிர்களுக்கு உரங்கள் வீசவேண்டியநிலையில் மாந்தைகிழக்கு,துணுக்காய் ஆகிய கமநல சேவை நிலையங்களூடாக உரவிநியோகம் தொடங்கப்படவில்லையெனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை துணுக்காய் கமநலசேவை நிலையத்திலுள்ள உழவியந்திரங்கள் சிறுபோக நெற்செய்கையின் உழவுக்கு பயன்படுத்த முடியாதநிலையில் இருப்பதாகவும் இக்கமநல சேவை நிலையத்தின் எட்டு உழவியந்திரங்களிலிருந்து மின்கலங்கள் திருடப்பட்ட நிலையில் உழவியந்திரங்கள் பயன்படுத்தப்பட முடியாத நிலையிலிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (160)

# படகில் சென்ற நால்வர் தெய்வாதீனமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

குருநகர் இறங்குதுறை பகுதியில் இருந்து கடற்றொழிலுக்குப் படகு மூலம் சென்ற நால்வர் அதிஷ்டவசமாக உயிர்தப்பினர்.

நேற்றுமுன்தினம் பி.ப 2 மணியள்வில் கடற்றொழிலுக்காக படகில் நான்கு மீனவர்கள் சென்றுள்ளனர்.இரணைதீவு பகுதியில் வைத்து காற்று பலமாக வீசியதால் படகு கவிழ்ந்துள்ளது இதனால் நான்கு மீனவர்களும் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த வேளை மற்றைய படகில் வந்த மீனவர்கள் அவர்களை காப்பாற்றினர்.

மேலும் குறித்த சம்பவத்தில் அதிஷ்டவசமாக உயிர் தப்பியவர்கள் வேளாங்கன்னி வீதியில் வசிப்பவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## முரசின் இன்றைய பலன்

(18.05.2015 திங்கட்கிழமை)

மன்மத வருஷம் வைகாசி மாதம் 04 ஆம் திகதி.

மரணயோகம். அமாவாசை - திதி.

கார்த்திகை நட்சத்திரம் மு.இ 10.45 வரை. பின் ரோகினி.

இராகுகாலம் 07.23-08.53 வரை சுபநேரம் 11.53-01.23 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
வேலைப்பளு நீங்குவதினால் மகிழ்வு நிலை தக்க வைத்தல்.

**ரிஷபம்**
கணக்கு வைத்ததில் சந்தேகம் ஏற்பட்டதால் வாழ்க்கையை கைவிடல்.

**மிதுனம்**
வேலிப்பிரச்சினை சம்பந்தமாக அயலவருடன் ஏற்பட்ட முரண்பாடு நீங்குதல்.

**கடகம்**
தொலைக்காட்சி நிகழ்விவைப பார்ப்பதில் தம்பதியினருக் கிடையே சச்சரவு தோன்றுதல்.

**சிம்மம்**
நிலுவையின் ஒரு பகுதி வந்தடைந்ததினால் திருப்தி ஏற்படல்.

**கன்னி**
ஒற்றைத் தலைவலியால் அவதிப்பட்டுக் குணமடைதல்.

**துலாம்**
அனுபவசாலிகளின் கருத்தினைக்கேட்டு முடிவெடுத்தல்.


**விருச்சிகம்**
மனையாளின் நோய் குணமடைந்து வருவதை எண்ணி இறைவனுக்கு நன்றி கூறுதல்.

**தனுசு**
தவறவிடப்பட்ட ஆவணங்கள் பகீரதப்பிரயத்தன தேடுதலின் பின் கிட்டிவிடல்.

**மகரம்**
புதியநட்பு எதிர்ப்பட்டவேளை முளையிலேயே கிள்ளி விடுதல்.

**கும்பம்**
வங்கிக்கடன் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படல்.

**மீனம்**
பயணத்தினால் பிரிவும், கவலையும் வாட்டுதல்.



## சிங்கம் ஒன்று புறப்பட்டதே...

முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் ராவிட்டை இந்தியாவின் தடுப்பு சுவர் என்று வர்ணிப்பார்கள். அந்தத்தடுப்பு சுவர் தான் பல நாடுகளின் (கிரிக்கெட் போட்டி கள்) தாக்குதலிலிருந்து இந்தியாவைக் காப்பாற்றி, இந்திய அணியின் வெற் றிக்குக் காரணமாயிருந்தது.

இப்போது இந்தியாவின் வருங்கால வெற்றிக்குக் காரணமாக, 2 குட்டி சிங்கங்கள் வெறித்தனமாக கிரிக்கெட் பயிற்சி மேற்கொண்டு வருகின்றன. அந்தச் சிங்கங்கள் ராவிட்டின் மகன் களான சமித் மற்றும் அன்வய்.

இருவரும் கடந்த வெள்ளி அன்று மும்பை மைதானத்தில் அசால்ட்டாக டைவ் அடித்து ப்ராக்டீஸ் செய்தது, பல சர்வதேச வீரர்களை திரும்பிப் பார்க்க வைத்தது. அவர்களில் ஒருவரான அவுஸ்ரேலிய வீரர் ஸ்ரீபன் ஸ்மித் இருவருக்கும் சில கிரிக்கெட் ஆலோ சனை வழங்கியுள்ளார்.

அப்பா ராவிட் தற்போது ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு ஆலோசகராக இருப்பதால், அவருடன் சர்வதேச மைதா னங்களை வலம் வந்து எப்போதும் கிரிக்கெட்...கிரிக்கெட்...கிரிக்கெட் என்று, இருவரும் கிரிக்கெட்டையே சுவாசித்து வருகின்றனர்.

# 3 ஆண்டுகள் நாங்கள் பெற்ற முக்கிய புள்ளி இது

(பெங்களூர்)

பரபரப்பான ஆட்டத்தில் ஹைதரா பாத் அணியை வீழ்த்தியது மகிழ்ச்சி அளிக்கிறது. கடந்த மூன்று ஆண்டு களில் நாங்கள் பெற்ற மிக மிக முக் கியமான 2 புள்ளிகள் இதுதான். 2012 மற்றும் 2013இல் சன்ரைசர்ஸ் அணியால் தான் எங்கள் வாய்ப்பு வீணானது என பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிக் கப்டன் ஹோலி தெரிவித்துள்ளார்.

முக்கியமான தருணத்தில் இந்த புள்ளிகள் கிடைத்தது திருப்தியாக உள்ளது. நாங்கள் விளையாடிய லீக் ஆட்டங்களில் மழையால் பாதிக்கப்பட்ட நான்காவது போட்டி இது. குறைந்த ஓவர்களில் மிகவும் சவாலான இலக்கை எட்டியதற்கு வீரர்களின் ஒருங்கிணைந்த முயற்சியே காரணம். அடுத்தடுத்த பந்து களில் கெய்ல், டி வில்லியர்ஸ் ஆட்டமிழந்த பின், இலக்கை துரத்துவது மிகவும் கடினமாகிவிட்டது. எனினும், பதற்றமின்றி விளையாடி வெற்றியை வசப்படுத்தினோம். கடைசி 2 பந்தில் 4 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், நான் அடித்த பந்தை பவுண்டரியில் வோர்னர் பிடித்தபோது வெற்றி கை நழுவியதாகவே உணர்ந்தேன்.

ஆனால், அவர் எல்லைக் கோட்டின் மீது கால் வைத்ததை ஆடுகளத்தில் இருந்தே என்னால் பார்க்க முடிந்தது. கான்டேக்ட் லென்ஸ் அணிந்திருந்ததால் அவ்வளவு தொலைவு பார்க்க முடியும் என்று எதிர்பார்க்கவில்லை. அந்த காட்சி மட்டும் தெளிவாகத் தெரிந்தது. வாழ்நாளில் அதை மறக்க முடியாது. வோர்னர் மிகச் சிறந்த் களத்தடுப்பாளர். ஆனாலும், பதற்றமான கட்டங்களில் சிறந்த வீரரும் கூட பிடி வாய்ப்பை நழுவவிடுவது வழக்கமான ஒன்றுதான்.

வோர்னருக்காக வருத்தப்படுகிறேன்



என்றாலும், எங்களுக்கு 2 புள்ளிகள் முழுமையாகக் கிடைத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன் என ஹோலி மேலும் தெரிவித்தார்.

தோல்வி குறித்து ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணி கப்டன் டேவிட் வோர்னர் கருத்து தெரிவிக்கையில், எங்களது துடுப்பாட்டம் சிறப்பாக இருந்தது.

மழை காரணமாக வெற்றி இலக்கு மாற்றி அமைக்கப்பட்டதால் எங்களால் அதனை சமாளிக்க முடியாமல் தோல்வி காண நேரிட்டது. எனது களத்தடுப்பு மோசமாக இருந்தது. பவுண்டரி எல்லையை கவனிக்காமல் மிதித்து விட்டேன் என்றார்.

# சுகமான சுமை

எவ்வித நெருக்கடியும் இன்றி, மன-தளவில் போட்டியை எதிர்கொள்ள முழுக் காரணம் எனது தோழி டேனி வில்லிஸ் என, ராஜஸ்தான் அணி கப்டன் ஸ்ரீபன் ஸ்மித் தெரிவித்துள்ளார்.


அவுஸ்ரேலிய அணியின் இளம் வீரர் ஸ்ரீபன் ஸ்மித், இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாக செயற்பட்டு, அணியின் வெற்றிக்கு பெரும் பங்காற்றினார். ஐ.பி.எல்., தொட ரில் ராஜஸ்தான் அணிக்கு முதலில் கப்டனாக களமிறங்கி அசத்தினார். இதுவரை 12 போட்டிகளில் 2 அரை சதம் உட்பட 267 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

எனது காதலி டேனி வில்லிஸ் சட்டத்துறை மாணவி. நான் எங்கு சென்று விளையாடினாலும், என்னுடன் வந்து விடுவார். போட்டிகளின் போது, ஏற்படும் நெருக்கடிகளை குறைக்க உதவியாக இருப்பார். தவிர, ஒவ்வொரு போட்டிக்கும் முன்பு, மன-தளவில் என்னை சிறப்பான முறை யில் தயார் செய்வார். பயிற்சியின்



போது உதவியாக இருந்தாலும், அதிக விடயங்களில் தலையிட மாட்டார். எனது துடுப்பாட்ட ஸ்டைல் குறித்து கூட அதிகமாக, விமர்சிக்க மாட்டார். சாம்சன், ஹூடா உள்ளிட்ட திறமையான இந்திய வீரர்கள் உள்ளனர். இதனால் களமிறங்கும் 11 பேர் அணியை தேர்வு செய்வது கடினமாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜோகோவிச், பெடரர் பலப்பரீட்சை




(ரோம்)

இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் சேர்பியாவின் ஜோகோவிச், சுவிட்சர்லாந்தின் பெடரர் பலப்பரீட்சை நடாத்தவுள்ளனர்.

ரோம் நகரில் இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் முதல் நிலை வீரரான சேர்பியாவின் ஜோகோவிச், ஸ்பெயினின் டேவிட் பெரரை சந்தித்தார். முதல் செட்டை 6-4 என கைப்பற்றிய ஜோகோவிச், இரண்டாவது செட்டையும் 6-4 என தன்வசப்படுத்தினார். முடிவில், ஜோகோவிச் 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 6-4, 6-2 என சக வீரர் வாவ்ரின்காவை தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இதேவேளை, பெண்கள் இரட்டையர் பிரிவில் அரையிறுதி ஆட்டத் தில் சானியா மிர்சா (இந்தியா)-மார்ட்டினா ங்கிஸ் (சுவிட்சர்லாந்து) ஜோடி 6-2, 7-6 (7-5) என்ற நேர்செட்டில் கரோலின் கார்சியா (பிரான்ஸ்)-காதரின் செர்போனிக் (சுலோவேனியா) ஜோடியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.



## விரைவாக ஹட்ரிக் கோல்

இங்கிலாந்தில் நடைபெற்று பிரி-மியர் லீக் கால்பந்து போட்டித் தொடரில் சௌத்தாம்ப்டன் அணி வீரர் சாடியோ மனே அதிவேக ஹட்ரிக் கோல் அடித்து சாதனை படைத்தார். ஆஸ்டன் வில்லா அணிக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் அவர் முதல் 3 நிமிடங்களுக்குள்ளாகவே தொடர்ச்சியாக 3 கோல் அடித்து இந்தச் சாதனையை நிகழ்த்தினார். இந்தச் சாதனையை நிகழ்த்தியது மிகவும் சிறப்பாக இருக்கின்றது. இது போன்ற சாதனை குறித்து நான் முன்பு கேள்விப்பட்டிருக்க வில்லை. இது அற்புதமான தருணமாகக் கருதுகின்றேன். இதற்கு சக வீரர் களின் ஒத்துழைப்பே காணரம் என சாடியோ மனே தெரிவித்துள்ளர்.

# மீண்டும் 'மும்மூர்த்திகள்'



(புதுடில்லி)

இந்திய அணியின் உயர் செயற்றிறன் முகாமை யாளராக இந்திய அணியின் முன்னாள் கப்டன் கங்குலி நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை, சச்சின், ராவிட் ஆகியோரும் அணியின் வெற்றிக்காக பாடு படவுள்ளனர்.

இந்திய கிரிக்கெட்டின் மும்மூர்த்திகள் சச்சின், ராவிட், கங்குலி. ஓய்வு பெற்ற இவர்கள், மீண்டும் ஆதிக்கம் செலுத்தவுள்ளனர்.


இதன்படி, உயர் செயற்றிறன் முகாமை யாளர் பொறுப்பை ஏற்க சம்மதித்துள்ளார் கங்குலி. இவர், அன்னிய மண்ணில் இந்திய அணியின் செயற்பாட்டை மேம்படுத்துவது தொடர்பாக அறிக்கை அளிக்க உள்ளார். கடந்த ஆண்டு இங்கிலாந்து, அவுஸ்ரேலியாவில் நடந்த போட்டிகளில் இந்தியா தோற்றது. இது போன்ற தோல்விகளை தவிர்க்க தரமான ஆலோசனைகளை கங்குலி தருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய கிரிக்கெட் அக்கடமியின் தலைமை பொறுப்பு சச்சினுக்கு கொடுக்கப்படவுள்ளதாக தெரி கிறது. திறமையான இளம் வீரர்களை கண்டறிய முயற்சி மேற்கொள்வார்.

சமீபத்தில் அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை யுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி, அக்கடமி உயர் செயற்றிறன் மையமாக மாற்றப்படவுள்ளது. இதுகுறித்து முழுமையாக தெரிந்து கொண்ட பின், விரைவில் சச்சின் பொறுப்பேற்பார்.

கனிஷ்ட வீரர்களின் முன்னேற்றத்துக்காக ராவிட் பணியாற்ற உள்ளார். 19 வயதுக்குட்பட்ட அணியி னருடன் இணைந்து செயற்படுவார். ஐ.பி.எல்., தொடர் முடிந்த பின், பி.சி.சி.ஐ.,யுடன் ராவிட் ஒப்பந்தம் செய்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# டைமண்ட் லீக் தடகளம்; ஜமேக்க வீராங்கனை தங்கம்




டைமண்ட் லீக் தடகளப் போட்டியின் பெண்களுக்கான 200 மீற்றர் போட்டியில் ஜமேக்கா வீராங்கனை சாதனை படைத்துள்ளார்.

கட்டார் நாட்டில் உள்ள டோகா நகரில் 2015ஆம் ஆண்டின் டைமண்ட் லீக் தடகள போட்டி நடைபெற்றது. இதில் அமெரிக்காவின் தடகள வீராங்கனை அல்லிசன் பெலிக்ஸ் 200 மீற்றர் பந்தய தூரத்தை 21.98 வினாடிகளில் கடந்து சாதனைப் படைத்தார். இதன் மூலம் கடந்த 2010ஆம் ஆணடு ஜமேக்காவைச் சேர்ந்த வெரோனிகா கேம்ப்பெல்-பிரௌன் செய்த லீக் போட்டியின் சாதனையை சமன் செய்தார். பெலிக்ஸ், கட்டார் ஸ்போர்ட்ஸ் கிளப்பில் 12 முறை போட்டியில் கலந்து கொண்டார். இதில் இவரது 11ஆவது வெற்றி இதுவாகும். இதற்கு முன் டோகாவில் 100 மீற்றர் ஓட்டத்தில் 3 பதக்கமும், 200 மீற்றர் ஓட்டத்தில் இரண்டு பதக்கமும், 400 மீற்றர் ஓட்டத்தில் 5 பதக்கமும் வென்றுள்ளார். வெற்றி குறித்து அவர் கூறுகையில், மிக வேகமாக ஓடி நன்றாக செயற்பட்டேன் என்று நினைக்கிறேன். இது எனது ஆரோக்கியத்திற்கும் நல்லது. ஓகஸ்ட் மாதம் நடைபெற இருக்கும் உலக சம்பியன்ஷிப் போட்டியை எதிர்நோக்கி இருக்கிறேன்.





முதலாவது ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளில் பெண்களுக்கான 400 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தை வென்ற யாமனி துலாஞ்சலிக்கு கடந்த வெள்ளிக்கிழமை கினிகத்தேனை பொதுமக்களினால் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. ஹற்றன்- கொழும்பு பிரதான வீதி-யில் கினிகத்தேனை கலுகொலை பகுதியில் வரவேற்பு வாகன பேரணி ஆரம்பமானது. அதன் பினனர் வாகன பேரணி நாவலப்பிட்டி நகரத்திற்கு சென்றடைந்து, மீண்டும் யாமனி துலாஞ்சலி கல்வி கற்கும் அம்பகமுவை பாடசாலையை அடைந்தது. அங்கு யாமனி துலாஞ்சலி மற்றும் பயிற்சி அளித்த ஆசிரியர் அனுர பண்டார திஸாநாயக்கவுக்கும் வரவேற்பு அளிக்கப்பட்டது. மேலும் தங்கப் பதக்கத்தை சுவீகரித்த யாமனி துலாஞ்சலிக்கு அதிகளவான பொது மக்கள் வீதிகளில் கூடியிருந்து தமது வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

விளையாட்டுச் செய்திகள்

# ஒலிம்பிக் செயலமர்வில் மன்னார் மாணவன்




(மன்னார்)

சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் ஏற்பாட்டில் 55ஆவது சர்வதேச ஒலிம்பிக் செயலமர்வு கிறீஸில் எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் இடம்பெறவுள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மரியான் அன்ரனிஸ் என்ற மாணவன் இலங்கையின் சார்பாக கிறீஸிற்கு பயணமாகவுள்ளார்.

மன்னார் சிறிய குருமட வீதியைச் சேர்ந்த மரியான் அன்ரனிஸ் என்ற மாணவன் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் கல்வி கற்று பல்கலைக்கழக அனுமதி பெற்று, யாழ். பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பீடத்தில் கல்வி கற்று வருகின்றார்.

இந்நிலையில் இலங்கையில் இருந்து குறித்த ஒலிம்பிக் நிகழ்வுக்கு கிறீஸில் தடம் பதிக்கும் ஒரே ஒரு தமிழ் மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த மாணவனை கௌரவப்படுத்தும் வகையிலும் அவரின் வெளிநாட்டு பயணத்திற்கு உதவிடும் வகையிலும், லைக்காவின் ஞானம் அறக்கட்டளை நிதியத்தின் மன்னார் மாவட்ட அலுவலகத்தினால் முதற்கட்டமாக ஒரு தொகுதி நிதி உதவியினை கடந்த வெள்ளிக்கிழமை வழங்கியது.

மன்னார் அலுவலகத்தில் வைத்து மாவட்ட இணைப்பாளர் எஸ்.கேதீஸ்வரன் மற்றும் மடு பிரதேசச் செயலாளர் எப்.சி.சத்திய சோதி ஆகியோர் இணைந்து குறித்த நிதி உதவியை வழங்கி வைத்தனர்.

வடபகுதியில் விளையாட்டுத் திறனை வளர்த்துக் கொள்வதற்கு எமது நிறுவனம் உதவி வருகின்றது. அந்த வகையில் ஒலிம்பிக் செயலமர்விற்குச் செல்லும் மரியான் அன்ரனீஸ்"க்கு உதவி புரிவதில் நாம் பெருமைப்படுகின்றோம். தொடர்ந்தும் உதவுவோம் என லைக்காவின் ஞானம் அறக்கட்டளை நிதி நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# கொக்குவில் மத்தியின் கூடைப்பந்து; லீக் சுற்றில் வென்ற அணிகள்

(கொக்குவில்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தினால் நடாத்தப்பட்டு வரும் கூடைப் பந்தாட்டப் போட்டித் தொடரில் இரு தினங்கள் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளின் விபரம் வெளியாகியுள்ளது.

லீக் முறையில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடர் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் ஐந்து போட்டிகள் நடைபெற்றன.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் ஜொலிஸ்ரார் அணியும் காங்கேசன்துறை ஐக்கிய அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஜொலிஸ்ரார் அணி 64-63 என்ற புள்ளிகள் அடிப்பண்டயில் வெற்றிபெற்றுள்ளது.

நேற்றுக் காலை நடைபெற்ற போட்டியில் முல்லைத்தீவு அணியும் யாழ். பற்றீசியன்ஸ் அணியும் மோதின. இதில் பற்றீசியன்ஸ் அணி ஆதிக்கமே போட்டியின் ஆரம்பம் முதல் காணப்பட்டது. ஆட்ட நேர முடிவில் பற்றீசியன்ஸ் அணி 50-42 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

மற்றுமொரு போட்டியில் சென்றலைட்ஸ் அணியும் யாழ். பல்கலைக்கழக பழைண மாணவர் அணியும் மோதின. இதில் சென்றலைட்ஸ் அணியின் ஆதிக்கமே போட்டியின் ஆரம்பம் முதல் காணப்பட்டது. சென்றலைட்ஸ் அணி தொடர்ந்து புள்ளிகள் பெற்றவண்ணமிருந்தது. ஆட்ட நேர முடிவில் சென்றலைட்ஸ் அணி 62-25 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

மற்றுமொரு போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியும் முல்லைத்தீவு அணியும் மோதின. இப்போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி 62-42 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இறுதியாக நடைபெற்ற போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியும் முல்லைத்தீவு அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளுமே மாறி மாறி புள்ளிகள் பெற்ற வண்ணமிருந்தன. ஆட்ட நேர முடிவில் யாழ். பல்கலைக்கழக அணி 61-41 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

(93)

# தொடர்ந்தும் மத்தியூஸ்



(கொழும்பு)

அஞ்சலோ மத்தியூஸ் இலங்கை கிரிக்கெட் அணியின் ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணிகளுக்கான தலைவராக தொடர்ந்தும் செயற்படுவார் என இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அதேநேரம் ருவெண்ரி-20 அணிக்கான தலைவராக லசித் மலிங்க செயற்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள இங்கிலாந்துடனான கிரிக்கெட் தொடர் நிறைவடையும் வரையில், அஞ்சலோ மத்தியூஸ் டெஸ்ட் மற்றும் ஒருநாள் அணிகளின் தலைவராக செயற்படுவார்.

அதேநேரம், 2016ஆம் ஆண்டு உலக கிண்ண ருவெண்ரி-20 போட்டிகள் வரையில் லசித் மலிங்க ருவெண்ரி-20 அணிக்கான தலைவராகச் செயற்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வலய மட்ட மெய்வல்லுநர் வட்டுக்கோட்டையில் இன்று

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளின் வலய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் இன்றும் நாளையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிகள் இன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாகவும், இப்போட்டிகளில் பங்குகொள்ளும் வீர, வீராங்கனைகளை உரிய நேரத்திற்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஏனைய வலய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் நிறைவடைந்துள்ளதுடன் மாவட்டப் போட்டிக்கும் தயாராகி வருகின்றது. இந்நிலையில் வலிகாமம் கல்வி வலயப் போட்டியாளர்களும் சிறந்த திறனை வலய மட்டப் போட்டிகளில் வெளிப்படுத்தி பாடசாலைகளுக்குப் பெருமை சேர்க்கும், அதே வேளை, தொடர்ந்து நடைபெறவுள்ள மாவட்ட, மாகாணப் போட்டிகளிலும் ஜொலித்து தேசிய மட்டப் போட்டிகளில் சாதனை படைக்க வேண்டும் என விளையாட்டு ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(93)





வடமராட்சி புலோலி தென் மேற்கு கந்தமுருகேசனார் மாதிரி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு நடைபெற்றபோது....

# மாணவி படுகொலையும் சிறிதரன் எம்பியின் கடிதமும்




**- தீவான் -**

**பு**ங்குடுதீவில் உயர்தரவகுப்பு மாணவி பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். உள்ளூர்வாசிகளால் இந்த வன்முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குற்றவாளிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். யுத்தம் முடிவுற்றதன் பின் தமிழ்ப்பகுதிகளில் படிப்படியாக வன்முறைகளும் பாலியல் கொடூரங்களும் திருட்டுக்களும் அதிகரித்த வண்ணமே உள்ளன.

இத்தகைய சம்பவங்களை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அரசியல்வாதிகளின் ஈடுபாடு அறவே இல்லையெனலாம். தமிழ்த்தேசியம் பேசி மக்களை உருவேற்றி தமது இருப்பை தக்கவைத்துக் கொள்வதில் அவர்களது கவனமே காணப்படுகிறது. உதாரணமாக மாணவியின் படுகொலை தொடர்பாக சிறிதரன் எம்.பி எழுதியுள்ள கடிதத்தை பாருங்கள்

**புங்குடுதீவு மாணவி படுகொலை தொடர்பில் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு சிறீதரன் நா.உ. கடிதம்**

புங்குடுதீவில் மாணவியொருவர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருப்பது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் வடக்கு மாகாண பிரதிபொலிஸ் மா அதிபருக்கு அவசர கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:

"யாழ்ப்பாணம் புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தில் நேற்று புதன் கிழமை பாழடைந்த வீடொன்றில் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் உயர்தரத்தில் கல்வி பயிலும் சி.வித்தியா என்ற மாணவியை கடத்தி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்படும் செய்தி அறிந்து மக்கள் அச்சமடைந்துள்ளனர். பொலிஸ் மற்றும் இராணுவம் கடற்படை என பாதுகாப்பு தரப்பினர் வடக்கில் நிறைந்துள்ள சூழலில் மாணவியின் கொலையொன்று இடம் பெற்றிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன் வடக்கில் காணப்படும் குற்றங்களோடு தொடர்புடையவர்கள் சம்பந்தமாக பொலிஸ் எடுக்கின்ற நடவடிக்கைகளில் மீது கேள்வி எழுந்துள்ளது. தீவுப்பகுதிகளில் இராணுவம் கடற்படை என்பனவற்றின் அதிக பிரசன்னம் காரணமாக அப்பகுதிகளில் மக்கள் மீளக்குடியேறி வாழ்வதில் மந்த நிலை இருக்கின்ற நிலையில் இத்தகைய கொடூரமான வெறித்தனமான குற்றவாளிகளால் மேற்கொள்ளப்படும் சம்பவங்களால் வடக்கு மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. அண்மைய நாட்களாக வடக்கு மாகாணத்தில் பல்வேறு பகுதிகளில் கொலைச் சம்பவங்களை தொடர்ந்து அறிகின்றோம். ஆகவே இவை உடனடியாக கட்டுப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு குறிப்பாக இளம் பெண்கள் மாணவிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதுடன், குற்றவாளிகள் விரைந்து கண்டு பிடிக்கப்பட்டு நீதியின் முன்நிறுத்தி தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டுமென தங்களை வேண்டிநிற்கின்றேன்" என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் மாணவியின் படுகொலை தொடர்பாக உடன் நடவடிக்கை எடுத்துள்ளனர். இது புங்குடுதீவு மக்கள் நடாத்திய எதிர்ப்பு நடவடிக்கையின் விளைவாகும். சிறீதரன் எழுதிய கடிதத்தில் பொலிஸ் மற்றும் இராணுவம் கடற்படை என பாதுகாப்புத் தரப்பினர் வடக்கில் நிறைந்துள்ள சூழலில் மாணவியின் கொலையொன்று இடம்பெற்றிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக எதற்கு குறிப்பிட்டிருக்கிறார்.

முன்பெல்லாம் இப்படியொரு சம்பவம் நடைபெற்றால் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அருகாமையில் இராணுவ காவலரண் உள்ளது என செய்திகளில் குறிப்பிடுவார்கள். இப்போது அவையாவும் இல்லாத பட்சத்தில் பொலிஸ், இராணுவம், கடற்படை இருந்தும் இவை நடைபெறுகின்றன. அப்படியானால் அவர் எதனைச்சொல்ல வருகிறார். கொலைகளும் வன்முறைகளும், பாலியல் கொடூரங்களும் உள்ளூர் வாசிகளால் மேற்கொள்ளப்பட்டாலும் அவற்றை இராணுவம் பொலிஸ் கடற்படை விரைந்து வந்து தடுக்கவேண்டும் என சொல்கிறாரா?

அல்லது உள்ளூர்வாசிகள் மேற்கொண்டாலும் பழிகளை இராணுவம் கடற்படை பொலிஸ் மீது சுமத்துகிறாரா? கடிதம் எழுதுவதில் பிரயோசனமில்லை. இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான வழிகளை யோசிக்க வேண்டும். இத்தகைய சம்பவங்கள் ஏன் ஏற்படுகின்றன என்பது பற்றி ஆராய வேண்டும்.

புங்குடுதீவில் பட்டப்பகலில் இத்தகைய சம்பவம் நடைபெற்றிருக்கிறது. யாரும் அதனை காணவில்லையென்றால். மக்கள் நடமாட்டம் மிகவும் குறைந்து போயிருக்கிறது. முன்பு போல் புங்குடுதீவில் மக்கள் தொகையில்லை. 3000 மக்கள் அளவில்தான் இருப்பதாக புள்ளிவிபரம் கூறுகிறது. பத்தாயிரத்திற்கு அதிகமானவர்கள் ஊரை விட்டு வெளியேறி விட்டார்கள். பாழடைந்த வீடுகள், கவனிப்பாரற்ற நிலங்கள், திருடர் தொல்லை, பாதுகாப்பின்மை, வேலைவாய்ப்பின்மை, தொழிற்முயற்சிகள் இன்மை என பல வழிகளில் புங்குடுதீவு பின் தங்கியுள்ளது. சமூகவிரோதிகள் தமது நடவடிக்கைகளுக்கு மிகவும் வசதியாக அந்த ஊர் விளங்கிவருகிறது.


அரசியல்வாதிகளுக்கு, தமிழ்த் தேசியத்தை உருவேற்றுவதிலும் தமது வாக்கு வங்கிகளையும் பாதுகாப்பதிலும் உள்ள அக்கறை மக்களின் பாதுகாப்பில் கிடையவே கிடையாது. காணாமற் போனோர்கள் தொடர்பாக காட்டுகின்ற அக்கறையை தற்போதுள்ள மக்களின் பாதுகாப்பு நலன்களிலும் காட்டவேண்டும். அதை விடுத்து இராணுவம் பொலிஸ் கடற்படை மீது குற்றங்களை சுமத்துவதில் எதுவித நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

---

# ஆழ் மனதுக்குள் புகுந்து...!

**- மனநல மருத்துவர் வேதமாலிகா.**

**கு**ழந்தைகள் விளையாடுவதற்காகப் பொம்மைகளை அவர்களிடம் கொடுப்போம். ஆனால் மனநோயைக் குணமாக்கவும் அந்த பொம்மைகள் அவர்களுக்கு உதவுகின்றன. குழந்தைகளுக்கு மட்டுமல்ல, வயதானவர்களுக்கும் கூட இந்த பொம்மை மருத்துவம் பயன்படுகிறது.



மனிதர்களுக்கு அன்பு தேவைப்படுகிறது. அன்பு கிடைக்கவில்லை என்றால் மனிதர்கள் எரிச்சல் அடைகிறார்கள். கோபப்படுகிறார்கள். கையில் கிடைத்ததை எல்லாம் தூக்கி அடிக்கிறார்கள். உடைத்து நொறுக்குகிறார்கள். அந்தச் சமயம் பொம்மைகளை அவர்களிடம் கொடுத்தால், அமைதியாகிறார்கள்.

குழந்தைகளுக்கு இப்போது அம்மா, அப்பாவின் அரவணைப்பு கிடைப்பதில்லை. அம்மா, அப்பா இருவரும் வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம், வீட்டில் பெரியவர்களில்லாத தனிக்குடும்ப முறை எல்லாம் குழந்தைகளைத் தனிமைப்படுத்துகிறது. அன்புக்கு ஏங்கும் குழந்தைகளுக்கு மன நோய் வருகிறது. அவர்களைக் குணப்படுத்த பொம்மைகளை அவர்களிடம் கொடுத்தால், பொம்மைகளுடன் அவர்கள் கொஞ்சுகிறார்கள். விளையாடுகிறார்கள். பொம்மைகளைக் கட்டிப் பிடித்துத் தூங்குகிறார்கள். இதேபோன்று பெரியவர்களுக்கு, அவர்களுக்குள்ள மனக்குறைபாடுகளுக்கு ஏற்ப - பொருத்தமான பொம்மைகளைக் கொடுத்து அவர்களுடைய மனநோய்களைக் குணப்படுத்த முடியும்.

சில குழந்தைகள் மருத்துவம் செய்து கொள்ளமாட்டேன் என்று அடம்பிடிப்பார்கள். மருத்துவரைப் பார்த்ததும் கையைக் காலை உதைத்துக் கொண்டு கத்துவார்கள். அவர்களிடம் ஓர் அழகான பொம்மையைக் காட்டுங்கள். உடனே மருத்துவம் செய்து கொள்ள முன்வருவார்கள். ஒத்துழைப்பார்கள்.

இது மருந்தில்லா மருத்துவம். மனநோய்களுக்குத் தரப்படும் மருந்துகள் பெரும்பாலானவை மயக்கத்தைத் தரக்கூடியவை. நோயாளியை அமைதிப்படுத்த அதைத் தருகிறார்கள். மருந்துகளைத் தந்ததும் நோயாளியின் நரம்புகள் தளர்ந்து விடுகின்றன. மருந்தின் வேகம் குறைந்தவுடன் மீண்டும் நோயாளி பதற்றமாகி கத்த ஆரம்பித்துவிடுவார். மீண்டும் அவரை அமைதிப்படுத்த மருந்து கொடுப்பார்கள். இப்படி பல தடவைகள் மருந்து கொடுப்பதால், நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு, உடலில் பல நோய்கள் ஏற்பட்டு விட வாய்ப்புண்டு. ஓமோன்கள் பாதிக்கப்பட்டு உடல் இயக்கமே சீரற்றுப் போய் விடும். இப்படி மருந்துகளால் ஏற்படும் தீய விளைவுகளைத் தவிர்க்கவே இந்த ஆழ்மன மருத்துவம்.

எந்த மனநோய் ஏற்படுவதற்கும் அதற்கான காரணங்கள் நிச்சயம் இருக்கும். 40 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு நிகழ்ச்சி கூட ஆழ் மனதில் பதிந்து இப்போது மனநோய் ஏற்பட காரணமாகலாம்.

மனநோயாளி ஒருவரை ஹிப்னோடிச முறையில் அணுகி, அவருடைய ஆழ்மனதில் உள்ளவற்றை முதலில் கண்டறிகிறார்கள். பின்னர் நோய்க்கான அந்த ஆழ்மனப் பதிவை அவருடைய ஆழ்மனதில் இருந்து நீக்குகிறார்கள். அப்படி நீக்கிவிட்டால், அவருக்கு மனநோய் நீங்கிவிடுகிறது. மீண்டும் அந்த மனநோய் அவருக்கு வருவதில்லை. இதுதான் ஆழ்மன மருத்துவத்தின் சிறப்பு.

சில குழந்தைகள் படிப்பில் மந்தமாக இருப்பார்கள். மக்கு என்று எல்லாரும் அவர்களைக் கிண்டல் செய்வார்கள். பெற்றோரோ அக்குழந்தைகளைப் "படி... படி" என்று வற்புறுத்திக் கொண்டே இருப்பார்கள். ஆனால் அந்தக் குழந்தைகள் படிப்பில் முன்னேற்றமின்றியே இருப்பார்கள். அப்படிப்பட்ட குழந்தைகளின் ஆழ்மனதை அணுகி, "நான் நன்றாகப் படிப்பேன். நான் படிப்பில் திறமையானவன்" என்பன போன்ற எண்ணங்களை அவர்களுடைய மனதில் ஆழமாகப் பதித்துவிட்டால், அதற்குப் பிறகு, யாரும் சொல்லாமலேயே அவர்கள் நன்றாகப் படிக்க ஆரம்பித்துவிடுவார்கள் என்கிறார்கள் இந்த மருத்துவர்கள்.

இந்த ஆழ்மன மருத்துவத்தின் மூலம், மனச்சோர்வு, தேவையில்லாத பயங்கள், தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அடிக்கடி வருவது, காதில் யாரோ பேசுவது போல உணர்வது, எத்தனை முறை கைகளைக் கழுவினாலும் கைகளில் நோய்க்கிருமிகள், அழுக்குகள் இருப்பதாக நினைத்து அடிக்கடி கைகளைக் கழுவுவது போன்ற பல மனநோய்களைத் தீர்க்க முடியும்.

பேய் பிடித்து ஆடுவதாக ஊரில் சொல்லப்படுவதும் மனநோயின் வெளிப்பாடுதான். வாழ்க்கையில் அவர்களுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் அவர்களை எப்போதும்

# கூத்தருக்குக் கிடைத்த மாளிகை!

ஒட்டக்கூத்தர், தமிழ் மொழிக்குச் செய்த தொண்டுகளுக்கு அவரது நூல்களே சான்று. கடைசி காலத்தில் முதுமை காரணமாக, பார்வை மங்கி, உடல் தளர்ந்து போனாலும், வயது முதிர முதிர அவரது அறிவு விசாலமடைந்தது.

மடம் ஒன்றை ஏற்படுத்தி, அங்கே தனித்து வாழ்ந்தார். சமையற்காரன் ஒருவன் மட்டும் அவருக்கு துணையாக இருந்து, அவரைக் கவனித்து வந்தான். அவருக்கு பார்வை போய் விட்டதால், அவர் கூறும் பாடல்களை, "கற்றுச் சொல்லி" என்போர் ஏட்டில் எழுதிக் கொள்வர்.



இந்நிலையில், இரண்டாம் ராஜராஜன் பிறந்த நாள் வந்தது. அரண்மனை மற்றும் நாடு முழுவதும் ஒரே கொண்டாட்டம். முதுமை காரணமாக, வெளியில் செல்வதைக் குறைத்துக் கொண்ட ஒட்டக்கூத்தர், தம் பிறந்தநாளன்று அரண்மனைக்கு வர மாட்டார் என்றே நினைத்திருந்தான் மன்னன் ராஜராஜன். அதனால், தன் பிறந்த நாளின் பொருட்டு, ஒட்டக்கூத்தருக்கு செய்ய வேண்டிய சிறப்புகளை, அவர் இருந்த மடத்துக்கே அனுப்பி வைத்தான்.

மன்னன் அனுப்பிய பரிசுகளைப் பெற்ற கூத்தர், சமையற்காரனை அழைத்து, "நாம் அரண்மனைக்குச் சென்று நீண்ட நாட்களாகி விட்டது; மன்னரைப் பார்க்கக்கூட தவறி விட்டோம். நாளை அவரது பிறந்த நாள் என்பதால், நாம் அரண்மனைக்குச் சென்று, மன்னரை நேரில் வாழ்த்துவது தான் முறை. அரசவையில் கூட்டம் சேர்ந்து விட்டால், பார்வையிழந்த நான் சென்று வருவது கஷ்டம். அதனால், அதிகாலையிலேயே எனக்கு வெந்நீரும், பூஜைப் பொருட்களும் தயார் செய்து வை..." என்று முன்னதாகவே கூறி விட்டார்.

மறுநாள் அதிகாலையில், அரண்மனைக்குச் செல்பவர் உடுத்த வேண்டிய முறையில் ஆடை மற்றும் பிற ஆபரணங்களை அணிந்து புறப்படத் தயாரானார்.

சமையற்காரன், அரண்மனைக்குச் செல்ல வண்டி கொண்டு வருவதாகச் சொல்லிச் சென்றான். ஆனால் திரும்ப வேண்டிய நேரத்தில் வரவில்லை. "நாழிகை கடந்து கொண்டே இருக்கிறதே... போனவனைக் காணோமே..." என்று நினைத்துக் கொண்டிருந்த போது, வண்டி வீட்டு வாசலில் வந்து நிற்கும் ஓசையும், அதைத் தொடர்ந்து காலடி ஓசையும் கேட்டது.

"தம்பி... நேரமாகி விட்டது; சீக்கிரம் அரண்மனை செல்வோம். கொஞ்சம் கையைக் கொடு; மெதுவாக எழுந்திருக்கிறேன்..." என்றார் கூத்தர்.

ஒரு கரம் கூத்தரைப் பற்றியது; அந்தக் கரத்தின் பிடிப்பு, கூத்தரை வியப்பில் ஆழ்த்தியது. உடனே கூத்தர், தம் இரு கரங்களால் அந்தக் கரத்தைப் பற்றி, "இந்தக் கரம் வாழ்க... வெல்க! கங்காபுர மாளிகைக்கு நான் வருவற்கு முன், கங்காபுர மாளிகை எனக்குக் கிடைத்து விட்டதே..." என்றார்.

கங்காபுர மாளிகை என்பது கங்கைகொண்ட சோழபுரம் அரண்மனை. மா-ஆளி-கை, கங்காபுரத்தை ஆளுகிறவனுடைய கை என்பது பொருள்.


தன் கையைக் கொண்டே தன்னை அறிந்து, கூத்தர் பாராட்டியதைக் கண்டு, ராஜராஜன் வியப்படைந்தான். "முதுமை காரணமாக தாங்கள் அரண்மனைக்கு வர இயலாது என்பதால், தங்களை வணங்க நானே வந்தேன். வண்டி கொணரச் சென்ற சமையற்காரனை வழியில் நிறுத்தி வந்து விட்டேன்.... ஆசி கூறுங்கள்..." என்று அவரை வணங்கினான் மன்னன்.

**('ஒட்டக்கூத்தர்' என்ற நூலிலிருந்து)**

எரிச்சல டையச் செய்திருக்கும். கோபப்பட வைத்திருக்கும். எப்போதும் உணர்ச்சி வசப்பட்டவராக இருப்பார்கள்.

அதன் தொடர்ச்சியாக ஒருநாள் பேய் பிடித்து ஆடுவார்கள். அப்படி நடக்கும்போது எல்லாரும் அவர்களைக் கவனிப்பார்கள். அவர் விரும்பும் பானங்கள், உணவுகள், தின்பண்டங்களைத் தருவார்கள். எல்லாரும் அக்கறையுடன் அவரைப் பற்றிப் பேசுவார்கள். பிறரால் கவனிக்கப்படாதவர்கள், அன்பு கிடைக்காமல் ஏங்கிக் கிடப்பவர்களின் ஆழ்மனதில் பதிந்த வெறுப்பான, கோபமான, ஆத்திரமான எண்ணங்களே அவர்களை இப்படிப் பேய் பிடித்து ஆடச் செய்கின்றன.

அப்படி ஆடும்போது தற்காலிகமாகவாவது அவர்கள் பிறரால் கவனிக்கப்படுகிறார்கள். பிறர் தன்னைப் பரிவுடன் பார்க்க வேண்டும் என்ற உள்மன ஆசையின் வெளிப்பாடாகவே பேய் பிடித்து ஆடுவது நிகழ்கிறது. ஆனால் பேய் பிடித்து ஆடுபவர்களுக்கு இந்தக் காரணம் தெரியாது.



# அந்தோனியாரின் ஆக்ரோச எழுப்பம்!

## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

வடக்கு மாகாண சபையின்ரை செயற்றிறன், பகிரங்கத்தன்மை, நேர்மை தொடர்பாய் வடக்கு மாகாண சபையிலை ஒருத்தர் காட்டமாய்ப் பேசியிருக்கிறார். அவர் எதிர்க்கட்சித் தவராசாவோ எண்டு நினைச்சியள் எண்டால் ஏமாந்துதான் போடுவீங்கள். அவர் வேறை ஆருமில்லை சபையின்ரை பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதனே!

முந்தியும் அவர் சில விடயங்கள் குறித்து பேசியிருக்கிறார். என்ன மாயமோ பிறகு கொஞ்ச நாள் வாய் மூடி மௌனியாக இருந்தார். மைத்திரி இராச்சியத்தை உருவாக்கிறதுக்காக உதவினவைக்கு கட்சி மேலிடம் அளித்த உபகாரம் கொஞ்சம் வாயைக் கட்டிப் போட்டிட்டுது எண்டு சில பேர் குசுகுசுத்தது எவ்வளவு உண்மையோ நானறியேன்.

ஆனால் எத்தினை நாளைக்கு அப்பிடியிருக்கிறது? அதைவிட கடந்த 2010 முதல் நடந்த முறைகேடுகளை விசாரிக்கிற குழுவின்ரை தலைவரும் அவர்தானே! கன விசியங்கள் பிடிபடப் பிடிபடக் கோபமும் வருந்தானே!

முந்தின ஆளுநர் செய்தது மட்டுமில்லை இப்ப எங்கடை அமைச்சர் சிகாமணியள் செய்யிற ஊழல், முறைகேடுகள் எல்லை மீறிச் செல்லுது. இது தொடர்பிலை அனுப்பின கடுதாசிக்கு இன்னும் பதிலில்லை. இப்பிடியே போனால் சிங்கள ஆளுநரிட்டைத்தான் முறையிட வேண்டி வரும் எண்டு சீறியிருக்குது அந்தத் தமிழ்த் தேசியப் புலி,

வடக்கு மாகாண சபை ஆரம்பிச்சு ஒன்றரை வருசம் கடந்திட்டுது. இந்தக் காலத்திலை எத்தினை முறைகேடுகள் இடம்பெற்றிருக்குது எண்டு ஒரு பட்டியல் போட்டுப் பார்த்தால் அது அன்ரனி ஜெகநாதனைப் பைத்தியம் பிடிக்கச் செய்து விடும் எண்டு சொல்லுறார் இன்னொரு சீமான்.

வடக்கு மாகாண சபையிலையே உச்சக் கட்ட முறைப்பாடுகள் எங்கடை விவசாய மற்றும் கூட்டுறவு அமைச்சருக்கே வரும் எண்டு சொல்லுகினை. ஆனால் ஆரும் அவரை உச்சேலாதாம். அந்தக் காலத்திலை மகாகவி ஒரு குறும்பா எழுதினவர். முத்தெடுக்க மூழ்கினானாம் சீலன். முன்னுக்கு வந்து நிண்டானாம் காலன். பொத்தியொரு முத்தை காலன்ரை கையிலை வைக்க அவன் திரும்பிப் போனானாம். அதுபோலை எங்கடை அமைச்சர் சிகாமணியும் எங்கை ஆரைச் சமாளிக்கிறது எண்டு கற்று வச்சிருக்கிறார். அன்ரனி எம்மாத்திரம்?

அல்லிப்பளையிலை வின்பவர் எண்டொரு நிறுவனம் காத்து மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யுது. அதுக்காக கடற்கரை நெடுகிலும் காத்து அரணாக நிண்ட தாழை மரங்களை அழிச்சாச்சுது. அப்பிடி அழிச்சு 12 காற்றாடிகளை நிறுவியாச்சுது. இன்னும் 12 காற்றாடிகளை நிறுவப் போகினையாம்.

அந்த வேலைக்காகப் போன கனரக வாகனங்கள் எல்லாம் புலோப்பளை றோட்டை கிடங்கு முடங்காக ஆக்கி வச்சிருக்குது. ஆனாலும் அதைப் பற்றி ஐங்கரத்தாரும் கதைக்கேல்லை. அந்தப் பிரதேச மக்களின்ரை வாக்காலை மாகாண அரியணை ஏறிய அரியத்தாரும் கதைக்கேல்லை. கதைச்ச சனத்தையும் அரியத்தார் அடக்கிப் போட்டார்.

விசியம் என்னண்டு ஆராஞ்சால் மாதம் மாதம் பத்து லச்ச ரூபாய் வின் பவர் நிறுவனத்தாலை வழங்கப்படுகுதாம். அது எங்கை? எப்பிடி? ஆருக்குப் போகுதோ? அது எப்பிடிப் பயன்படுத்தப்படுகுதோ? ஆண்டவனுக்கே வெளிச்சம்.

அது மாதிரி நொதேர்ண் பவர் நிறுவனம் பல்தேசியக் கொம்பனியான வோக்கர்ஸ் நிறுவனத்தின்ரை துணை நிறுவனமாம். இதிலை பெருமளவு பங்குகள் புலம்பெயர்ந்திருக்கிற தமிழர் ஒருவரின்ரை கையிலை இருக்காம். (எங்கடை தமிழரசுக் கட்சியின்ரை உயர் தலைவர் ஒருத்தருக்கும் இதிலை பங்குகள் இருக்கெண்டு ஒரு உபகதையும் உண்டு)

எனவே அவர் ஐங்கரன் துணையிருந்தால் என்கரம் பலம் பெறுமெண்டு ஒரு டீலைப் போட்டிருக்கிறார். பிறகென்ன? அண்மையிலை காங்கேசன்துறை தல்செவன விடுதியிலை பெரிய விருந்தொண்டு அமைச்சராலை வைக்கப்பட்டிருக்குது. அந்த விருந்திலை பிரச்சினை உள்ள பகுதியின்ரை பிரதேச சபைத் தலைவரையும், போராட்டம் எண்டு வெளிக்கிட்டவையிலை ஒரு சிலரை உருவி எடுத்து அவையையும் கலந்து கொள்ளச் செய்து எந்த விக்கினமும் வராமல் பார்த்துக் கொண்டிருக்கிறாராம். அவையளுக்கும், சில ஊடகவியலாளர்களுக்கும் தாராள மனது பண்ணியிருக்கிறாராம்.

ஒரு தொலைக்காட்சியைத் தொடர்பு கொண்டு 'ஏனப்பா எத்தினையோ பிரச்சினையிருக்க இந்தத் தண்ணிப் பிரச்சினையை மட்டும் பெரிசு படுத்திறியள். கொஞ்சம் அவகாசம் குடுங்கோ. நாங்கள் முடிவு தாறம். அதுவரைக்கும் பேசாமல் இருங்கோ' எண்டு செல்லமாய்க் கடிஞ்சிருக்கிறார்.

அடுத்து கல்வியிலை எக்கச் சக்க முறைப்பாடுகள் வந்திருக்குதாம். பக்கச்சார்பு, முறையற்ற நியமனங்கள், தனக்கு நெருக்கமானவர்களுக்குப் பதவி வழங்கிறதுக்கான காய் நகர்த்தல்கள் எண்டு ஒரு பக்கம். முல்லைத்தீவிலை என்ன நடக்குது எண்டு அன்ரனிக்குத் தெரியாதே?

சுகாதாரமும் அப்பிடித்தான். போக்குவரத்து அமைச்சர் சுழியன். அவர் என்ன திருகுதாளம் செய்தாலும் கண்டுபிடிக்கேலாது.

இந்த நிலையிலை முறைகேடுகளைக் கண்டு பிடிக்க நினைச்சால் அன்ரனிக்கு பைத்தியந்தான் பிடிக்கும். அதை விட இப்பிடிப் புலம்பிறது பரவாயில்லை. உள்ளையிருக்கிறதை வெளியிலை கொட்டினால் மனப்பாரமாச்சும் குறையுமல்லே!




# நிகழ்வுகளின் பதிவுகள்....




சுன்னாகம் கதிரமலைச்சிவன் கோவிலின் வருடாந்த தேர்த்திருவிழா மிகவும் பக்தி பு,ர்வமாக இடம் பெற்றது. நேற்று முன்தினம் இடம் பெற்ற தேர்த்திருவிழாவில் மூன்று தேர்களில் சுவாமிகள் வெளி வீதி வலம் வருவதைக்காணலாம். (02)




மட்டக்களப்பு மாவட்டத்தின் பாரம்பரிய கலையாகவும் மட்டக்களப்பு தமிழர்களின் பாரம்பரிய கூத்துக் கலை களிமடு கிராமத்தில் சிறுவர்களுக்கு சலங்கை அணிவிக்கும் விழாவும் கூத்து நிகழ்வும் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றதைக் காணலாம்.




'அனுபவத்தின் ஆதங்கம்' கவிதை நூல் வெளியீடு அண்மையில் இடம் பெற்றபோது...




ஜோசப்வாஸ் அடிகளாரின் "வாழ்வு தந்த வாஸ்" வரலாற்று நாடகம் மேடையேற்றப்பட்டபோது... (48)





முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றது. கல்லூரி அதிபர் து.யேசுதானந்தர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் துணுக்காய் மருத்துவ மனையின் மருத்துவர் சண்முகநாதன் துவாரகா விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கான சின்னத்தினை சூட்டிவைப்பதைக்காணலாம். (160)

# மீள்குடியேறிய மக்களுக்கு உதவிகள் வழங்கப்படவேண்டும்

## செயலாளர் நாயகம் வலியுறுத்து



மீள் குடியேறும் மக்களுக்கு அடிப்படை வசதிகளை மேற்கொள்ள போதிய நிதியில்லை என மீள் குடியேற்ற அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டுவதாக செய்திகள் கூறுகின்றன. இந்திய அரசின் உதவியில் நாம் கடந்த ஆட்சிக் காலத்தின்போது எமது மக்களுக்கென 50,000 வீடுகளைப் பெற்றிருந்தோம். அவ்வாறே இந்தியா உட்பட பிற நாடுகளிடமும், அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் உதவிகள் பெறப்பட்டு, மீள் குடியேறியுள்ள மக்களுக்கான அடிப்படை வசதிகளை மேற்கொள்ள உரிய தரப்பினர் துரித நடவடிக்கைகளை எடுப்பது அவசியமென ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள செயலாளர் நாயகம் மீள் குடியேற்றப்பட்டுள்ள எமது மக்களுக்கான அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்கு அரசு விஷேட நிதி ஒதுக்கீடுகளுக்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டியது கட்டாயமாகும். இந்த அரசின் தேசிய நிறைவேற்றுச் சபையில் பங்கெடுத்துவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இவ் விடயம் தொடர்பில் கலந்துரையாடி, ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். ஆனால், கூட்டமைப்பினருக்கு இதில் அக்கறை இல்லை என்பதாலேயே அவர்கள் இவ் விடயம் தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளிலும் இறங்காமல், தங்களது சுகபோகங்களில் மாத்திரம் அக்கறை கொண்டு செயற்பட்டு வருகிறார்கள்.

அதே நேரம், எமது அண்டைய உறவு நாடான இந்தியாவிடம் இது தொடர்பில் உதவிகளைக் கேட்டுப் பெற முடியும். கடந்த ஆட்சிக் காலத்தில் நாம் இந்தியாவிடமிருந்து பல்வேறு உதவிகளைப் பெற்றுள்ளோம். 50,000 வீடுகள், வடக்கிற்கான ரயில் பாதை, எமது கமத்தொழிலாளர்களுக்கான உழவு இயந்திரங்கள், எமது பாடசாலை மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள், யாழ். கலாசார மண்டபம், துரையப்பா மைதான புனரமைப்புப் பணிகள், அப்போதைய எனது அமைச்சின் கீழான வடகடல் நிறுவனத்திற்கான புதிய இயந்திரங்கள், பனை ஆராய்ச்சி நிறுவன மீளமைப்பு மற்றும் நவீன இயந்திரங்கள், கைப்பணிக் கிராமங்கள் நிர்மாணம் போன்ற இன்னும் பல உதவிகளை நாம் இந்திய அரசுடனான எமது சுமுகமான உறவுகளைப் பயன்படுத்தியே பெற்றிருந்தோம்.

எனவே, மீள் குடியேற்ற மக்களின் தேவைகள் தொடர்பிலும் இவ்வாறான நடவடிக்கைகளும் அவசியமாகும். இதற்கு, முன்பிருந்ததைவிட நல்லதொரு சுமுகமான சூழல் தற்போது ஏற்பட்டுள்ளது என செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# இடநெருக்கடியில் இயங்கும் அ.த.க. பாடசாலையின் அவலம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி முக்கொம்பன் அ.த.க. பாடசாலை இடநெருக்கடியுடன் இயங்கிவருகின்றது. இப்பாடசாலையில் காணப்படுகின்ற தற்காலிகக் கொட்டகை மழைநேரங்களில் மாணவர்கள் கல்விகற்க முடியாத நிலையில் மழைநீர் வகுப்பறைக்குள் சிந்துவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

525 வரையான மாணவர்கள் கல்வி பயிலும் இப்பாடசாலையில் 120 வரையான மாணவர்கள் தற்காலிக கொட்டகைகளிலும் மரநிழலின்கீழும் கல்வி பயிலுவதன் காரணமாக மழைநேரங்களில் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர். (160)

# சிவில் குழுக்களை இயக்குமாறு முள்ளியவளை மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சில பொலிஸ் நிலையங்களில் பொலிஸ் ஆலோசனை குழுக்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு குழுக்கள் என்பன சீரான முறையில் இயங்காமல் உள்ளதாக அப்பகுதி மககளும் சமூக ஆர்வலர்களும் சுட் டிக்காட்டுகின்றனர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வட மாகாணத்தின் முன்னால் பொலிஸ்மா அதிபர் திரு பூஜித ஐயசுந்தரவின் பதவிக்காலத்தில் நேரடி கண்காணிப்பின் கீழ் மாகாணத்தில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் மேற்படி குழுக்கள் இயங்கி வந்ததாகவும் ஆனால் தற்போது அவருடைய இடமாற்றலுக்குப் பின்பு கூடுதலான குழுக்கள் இயக்கமற்று காணப்படுவதாகவும் குறிப்பாக முள்ளியவளை பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட 18 கிராம அலுவலர்பிரிவுகளிலும் ஒரு சிவில்பாதுகாப்பு குழுதனிலும் சீராக இயங்காத நிலைமையே காணப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதனால் பல சட்டவிரோத செயல்களும் கசிப்பு விற்பனை சட்டவிரோத மரம் வெட்டுதல் சட்டவிரோத மண் அகழ்வு போன்றவற்றை கட்டுப்படுத்துவதில் பொலிஸாருக்கு முன்னைய காலங்களை விட சிரமமாகவே இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

எனவே குறித்த அதிகாரிகள் இவற்றை கருத்தில் கொண்டு மேற்படி குழுக்களை திறம்பட உருவாக்கி செயற்படுத்த வேண்டும் எனவும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். அதேபோல் ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திற்கும் ஒவ்வொரு ஆலோசனைக்குழுக்கள் அமைக்கப்பட்டு அவ் ஆலோசனைக்குளுக்களின் ஆலோசனையுடனே பொலிஸ் நிலையங்களின் செயற்பாடுகள் சில செவ்வனே செயற்படுத்தப்பட்டு வந்ததாகவும் தற்போது சில பொலிஸ் நிலையங்களில் குறித்த ஆலோசனைக் குழுக்கள் இயக்கமற்று உள்ளதால் அக்குழுக்களையும் திறம்பட செயற்படுத்துவதன் மூலம் பொது மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையேயான சமூக உறவுகளை கட்டி எழுப்ப முடியும் எனமும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (125)




## பெண் பொலிஸ் கொஸ்தாபல்கள் (Post of Woman Police Constable (Normal)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தினால் மேற்படி பதவிகளுக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் கணிதம் உட்பட இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாதவராகவும் 28 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 05 ஆம் திகதிக்கு முன்னர் 'பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல.375, 1ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை கொழும்பு-06' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பிக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

## வன பாதுகாப்புத் திணைக்களம் வன விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் (Post of Forest Extension Officer)

வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் வன விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகுதி வாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஒரே தடவையில் தமிழ், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் யூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்கம், ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவு, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல. 1503, கொழும்பு' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வன விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான (திறந்த) போட்டிப் பரீட்சை - 2015' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

## இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு நேரடி ஆட்சேர்ப்பு (Sri lanka Accountant's Service)

இலங்கை கணக்காளரி சேவையின் தரம் III இற்கு தொழிற்தகைமைக்கமைய திறமை அடிப்படையில் நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் 22 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் யூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் 'செயலாளர், பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு (கடந்த 15.05.2015 ஆம் திகதி வெளியாகிய அரச வர்த்தமானியில் முகவரி சரியாகக் குறிப்பிடப்படவில்லை என்பதை கவனித்துக் கொள்ளுங்கள்) என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இன் கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம்' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

## வினைத்திறமைக்கான் பரீட்சைகளி

அரசாங்க முகாமை உதவியாளர்கள் சேவையின் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைதிறமைகான் தடைப் பரீட்சை - 2012 (1) 2014 (2015) எதிர்வரும் 23 ஆம் திகதி நாடு முழுவதும் நடைபெறவுள்ளது.

❑ ❑ ❑ ❑ ❑

அரசாங்க சேவையின் கனிஷ்ட ஊழியர்களை அரச முகாமை உதவியாளர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2013 (2015) எதிர்வரும் 24 ஆம் திகதி நாடு முழுவதும் நடைபெறவுள்ளது.

❑ ❑ ❑ ❑ ❑

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் சுங்க காவலர் தரம் III பதவிகளுக்கு பயிலுனர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014 (2015) எதிர்வரும் 24 ஆம் கிரமதி நாடு முழுவதும் நடைபெறவுள்ளது.

தொகுப்பு :- சி.எஸ்.எச். சாலிஸ்

# மகிந்தவுக்குப் பின்னால் 98 நாடாளுமன்ற உறுப்பினர்கள்

## வலுவடையும் ஆதரவு

(கொழும்பு)

குறைந்தபட்சம் 98 நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தரப்பிற்கு ஆதரவளிக்க இந்த 98 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணங்கியுள்ளனர்.

முன்னாள் பிரதமர் டி.எம். ஜயரட்ன பொதுச் செயலாளராக பதவி வகிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கதிரை சின்னத்தில் மகிந்த போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியிலோ இணைந்து போட்டியிடாது புதிய கூட்டணி ஒன்றை அமைத்து அதன் ஊடாக தேர்தலில் போட்டியிட சில சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களை அணி திரட்டி புதிய கூட்டணி ஒன்றை அமைத்து அதன் ஊடாக பொதுத் தேர்தலில் வேட்பாளர்களை களமிறக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நாடாளுமன்றம் கலைப்பு எப்போது? தெற்கிலிருந்து கசிகிறது தகவல்

நாடாளுமன்றம் பெரும்பாலும் அடுத்த வாரத்துக்குள் கலைக்கப்படலாம் எனவும், இதற்கான ஏறபாடுகள் அதிகளவில் காணப்படுவதாகவும் அமைச்சரவையின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைமை சீர்திருத்தம் தொடர்பிலான 20 ஆவது சட்டமூலம், தகவல் அறிந்துகொள்ளும் சட்டமூலம் மற்றும் ஏனைய ஆணைக்குழுக்கள் தொடர்பிலான சட்டமூலம் என்பன புதிய நாடாளுமன்றத்தின் பொறுப்பில் விடப்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய தேர்தல் முறைமையை கொண்டுவரவேண்டிய தேவைப்பாடு இருப்பினும். சகல கட்சிகளினதும் உடன்பாட்டைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது.

தற்போதுள்ள முக்கிய நடவடிக்கை நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு தேர்தலுக்குச் செல்வதாகும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# யுத்த வெற்றி விழா மகிந்த தலைமையில்

## இது பிரத்தியேக ஏற்பாடு



(கொழும்பு)

போர் வெற்றி நிகழ்வு இந்த முறையும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கொண்டாடப்படவுள்ளதாக முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு விஹார மகாதேவி பூங்காவில் இந்த நிகழ்வு நடாத்தப்படவுள்ளது.

தாய்நாடு அமைப்பு என்ற அமைப்பே இந்த நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளது.

இந்த அமைப்பு அண்மையில் அரசியல்வாதிகள் மற்றும் தென்னிலங்கை புத்தி ஜீவிகளால் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த நிலையில் இந்த அமைப்பு மே 8 ஆம் திகதி முதல் போர் வெற்றி வாரத்தை அறிவித்தது. இந்த அமைப்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசனும் உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை புலம்பெயர்ந்த தமிழர்களாலும். சர்வதேச நாடுகளாலும் விடுக்கப்படும் அச்சுறுத்தல்களின் கீழ் உண்மையான சமாதானத்தை பெறமுடியாது என்று முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.


ஏற்கனவே போர், வெற்றி நாளை போரினால் இறந்தவர்களுக்கான அனுஷடிப்பு நாளாக அரசாங்கம் நினைவுகூரவுள்ள நிலையிலேயே மகிந்த ராஜபக்ஷவின் தரப்பு அதனை போர் வெற்றி விழாவாக கொண்டாடவுள்ளது.

# 20 ஆவது திருத்தம் மீது ஐ.தே.க. ஆர்வம் காட்டாதது ஏன்?

20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினை நிறைவேற்றிக் கொள்ள ஐக்கிய தேசிய கட்சிக்கு தேவை இல்லாது போயுள்ளதாக அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினை நிறைவேற்றிக் கொள்ள ஐக்கிய தேசியக்கட்சி பாரிய முயற்சிகளை மேற்கொண்டதாகக் குறிப்பிட்ட அவர், முழு அர்ப்பணிப்புடன் செயறபட்டு நிறைவேற்று அதிகார முறையில் காணப்படும் மேலதிக அதிகாரங்களை குறைத்துள்ளதாகக் கூறியுள்ளார். எனினும், 20 ஆவது அரசியலமைப்பு திருத்தினை நிறைவேற்றிக்கொள்ள ஐக்கிய தேசியக்கட்சி அக்கறையுடன் செயற்படாமை ஏன் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க ஐக்கிய தேசிய கட்சியில் அங்கம் வகித்து கடந்த 2010 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் இணைந்து உயர் கல்வி அமைச்சராக செயற்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பரமர் சங்கமம்

போன மச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோடே... எண்ட கிராமத்து வாக்கியமொண்டுதான் ஞாபகத்துக்கு வருகுது. போனதுகள் திரும்பி வாறதொண்டும் புதுமையில்லை, வழமைதான்.

அதைத்தான் பழையன கழிதலும் புதியன புகுதலுமெண்டு சொல்லுறேண்டாலும், புதியன புகுதலுமெண்டதிலை புதுமை எதுவும் இல்லை. பழசுதான் புதிசு, புதிசுதான் பழசு எண்டதை எத்தனை பேருக்கு விளங்கும்.

புதிசெண்டது வெறும் பம்மாத்துப் பாருங்கோ! உங்களுக்குத் தேத்தண்ணிக்கடை, சாப்பாட்டுக்கடைச் சாமாச்சாரம் சட்டெனா நினைவுக்குப்படும். அதிலை மட்டுமெண்டில்லை சகல சமாச்சாரங்களிலும் நிலைமை அதுதான்.

விசயமென்னெண்டா கிட்டடியிலை என்னைச் சந்திச்ச கலை ஆர்வலரொருவர் 'கேட்டார் சமூக நாடகங்கள் நடத்துறதுக்கான விதிமுறையள் இருக்கா எண்டு. அதுகளெல்லாம் எந்தக் காலம் விடுபட்டது இப்ப எங்காலை எண்டன்.

எங்கடை சொந்தப் பணத்தைப் பரிசுத் தொகைகளாக அறிவிச்சு, சமூக நாடக எழுத்துப்போட்டி ஒண்டை நடாத்த வேணுமெண்டார். அப்புடியெண்டா உடனை சில நிபந்தனைகளைப் போட்டா அதே விதிமுறை தானை எண்டன். அவரும் ஏற்றுக்கொண்டார்.

உந்த முப்பதாண்டு குழப்பங்கள் எங்கடை எத்தினை விசயங்களைக் குழப்பிப் போட்டுதெண்டதைத் தினமும் பேப்பர்களிலை பார்த்துக்கொண்டுதானை வாறம். வலி. வடக்கு கிழக்கு மேற்குகளிலை இருந்ததுகள் வீட்டேம், காணியேம் மட்டுமே விட்டிட்டு ஓடி வந்ததுகள்?

பொருள் பண்டம் எண்டதோடை கலை, கலாசாரங்களேம் துலைச்சுப் போட்டுதானை தெருக்களிலை நிக்குதுகள். உந்த இடங்களிலை வாழ்ந்ததுகளின்ரை புள்ளை, புருஷனெண்டு எத்தினை பேர்களேம் துலைச்சுப் போட்டுக் காணாமற்போனோர் படையினர் கூட்டிச் சென்றோரெண்டும் தேடிக்கொண்டிருக்குதுகள். இந்த விசயங்களே போதும் நாடகப் பிரதிகளை எழுதுவதற்கும்.

முன்னமெல்லாம் ஒவ்வொரு கிராமங்கள்ளேம் எத்தினை நாடக மன்றங்கள் இருந்தது. திரும்பவும் அத்தகைய சூழல் கள் உருவாகிறேண்டாச் சந்தோசமாத்தானே இருக்கு. அப்புடி ஒண்டு வந்திட்டாச் சந்தியள்ல நிண்டு சும்மாத்தை ஆடுகிறதுகளும் நல்லா வந்திடுங்கள்.

இல்லாமல் போனே ஒண்டு திரும்பவும் வாறேண்டா போன மச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோடை எண்டாப்

# இராணுவ அணிவகுப்பில் பங்கேற்குமா கூட்டமைப்பு?

யுத்த நிறைவு குறிக்கும் வகையில் நடைபெறவுள்ள இராணுவ அணி வகுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சி பங்கேற்காது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறையில் நாளை யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதனை குறிக்கும் வகையில் இராணுவ அணி வகுப்பு நடைபெறவுள்ளது.

நிகழ்வுகளில் பங்கேற்பதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவான தீர்மானம் ஒன்றை எடுத்திருப்பதாக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு யுத்த நிறைவைத் தொடர்ந்து இந்த நிகழ்வு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றது. அனைத்து உறுப்பினர்களும் யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களில் பங்கேற்பதில்லை என்ற திடமான தீர்மானத்தில் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த நாள் தமிழர்களினால் கொண்டாடக்கூடிய நாள் அல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார். இறுதிக் கட்ட யுத்தத்தின் போது பெரும் எண்ணிக்கையிலான தமிழர்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த தினத்தை இலங்கை இராணுவம் கொண்டாடி மகிழக்கூடும் என்ற போதிலும் இந்த தினத்தை தமிழ் மக்கள் கொண்டாட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறையில் நடைபெறவுள்ள நிகழ்வுகளில் பங்கேற்கப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

# யுத்தத்தின் இறுதிநாட்களில் கடற்படையின் வியூகம் என்ன?

## காலம் கடந்து கசியும் தகவல்

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தம்முடன் பல விடயங்களை பகிர்ந்து கொண்டதாக மூத்த ஊடகவியலாளர் நடேசப்பிள்ளை வித்தியாதரன் தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

சுகவீனமான காலத்தில் அவர் விடுதலைப் புலிகளிடமிருந்து ஒதுங்கியே இருந்தார் என்றும் வித்தியாதரன் குறிப்பிட்டுள்ளார்.

பாலசிங்கம், இறுதிக்காலத்தில் தம்மை அருகிலேயே இருக்கச் செய்திருந்ததாக வித்தியாதரன் தெரிவித்துள்ளார்.

களை தாம் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரனிடம் கூறியதாக அவர் கூறியுள்ளார்.

குறிப்பாக பாலசிங்கம் இறுதிக் காலங்களில் பிரபாகரனுடன் திருப்தி கொண்டிருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாலசிங்கத்தை பொறுத்தவரை, ஐக்கிய இலங்கைக்குள் தனியான ஆட்சி ஒன்றை வெற்றி கொள்ளமுடியும் என்று நம்பினார். எனினும் பிரபாகரன் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

பாலசிங்கம் எதனைச் சொன்னாலும் விடுதலைப் புலிகளை பொறுத்தவரை அவர்கள் நம்பிக்கையைக் கொண்டிருந்ததாக வித்தியாதரன் கூறியுள்ளார்.

தம்மை பொறுத்திருக்குமாறும் எதிலும் ஈடுபடவேண்டாம் என்று பாலசிங்கம் இறுதி நேரம் அறிவுறுத்தப்பட்டிருந்தார்.

இறுதிப் போரின் போது விடுதலைப் புலிகளுக்கான சர்வதேச ஆயுத விநியோகம் இல்லாமல் போனது. இறுதி மூன்று நாட்களில் இலங்கை கடற்படை விடுதலைப் புலிகளின் கப்பல்களை இலக்கு வைத்து காத்திருந்தன.

இலங்கைக்கு உதவும் வகையில் இந்தியாவின் உட்பட சுமார் ஆயிரம் கப்பல்கள் சர்வதேச கடலில் நங்கூரமிட்டிருந்தன என்றும் வித்தியாதரன் தெரிவித்துள்ளார்.

**(16) பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக**

01. குஞ்சுகள் இரையை உண்டன
02. இனி என்னம்மா செய்யலாம்
03. சிவப்பு மஞ்சள் பச்சை போன்ற பல நிறங்களில் பலூன்கள் கட்டப்பட்டிருந்தன
04. நெல் விளைந்த பின்னர் என்ன செய்வார்கள்

**(17) சரியான சொல்லின் கீழ் கோடிடுக**

01. எமது நாட்டின் தேசிய விளையாட்டு (கிரிக்கெட், கரப்பந்து)
02. பிறநாட்டு விளையாட்டொன்று (கரப்பந்து, கிளித்தட்டு)
03. கிராமிய விளையாட்டொன்று (சடுகுடு, ரெனிஸ்)
04. பந்து பயன்படாத விளையாட்டு (எல்லே, கிளித்தட்டு)
05. கரப்பந்து விளையாட்டில் ஓர் அணியில் எத்தனை பேர் பங்குபற்றுவர் (ஆறு, பதினொன்று)

**(18) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக**

01. கல்வி / பிள்ளைகள் / கற்க / அனைவரும் / வேண்டும்
..........................................................................................
02. வணக்கம் / நின்று / கூறினோம் / நாங்கள் / அனைவரும் / எழுந்து
..........................................................................................
03. மேடையில் / பாடினார்கள் / சிலர் / நண்பர்கள் / ஏறி
..........................................................................................
04. வாழ்க்கையில் / படித்து / நன்றாக / வேண்டும் / முன்னேற
..........................................................................................
05. பேச்சு / எமக்கு / அதிபரது / தந்தது / உற்சாகத்தை
..........................................................................................

**(19) இடைவெளிக்குள் வரவேண்டிய பொருத்தமான எழுத்தை எழுதுக**

| | |
|---|---|
| 01. வா.......த்தினர் | 02. உ.......சாகம் |
| 03. உ.......மைகள் | 04. பெற.......ர்கள் |
| 05. கு.......ந்தைகள் | 06. கைகு....க்கி |
| 07. அ...வரும் | 08. மகி....ந்தோம் |

**நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்**

(01).01.தந்தை 02.பிறந்தார் 03.நீங்கி 04.அடியற்றமரம் 05.மரம் 06.இராமன்
(02).07.பிரயாணத்தை 08.மின்குமிழ் 09.சுற்றுலா (03).10.பிழை 11.சரி
(04).12.நேராக வீடு செல்லவும் 13.நான் வெளியே போகலாமா?
(05).14.shall we wash our hands? (06).15.1.o 2.U (07).16.செல்லம் கரன்ன யமுத?
(08).17.மீண்டும் வாருங்கள் வேண்டும் (09).18.18 19.உலகம் (10).20.தெளிந்த நல்லறிவு
21.பத்திரிகை 22.ஊர் வாயை மூட முடியுமா? (11).23.நடுக்கம்
24.நல்லவர் 25.தக்கதருணம், பொருத்தமான சந்தர்ப்பம் (12).26.கண்டுபிடிக்கப்பட்டது
27.இருந்தது 28.உதவுகின்றன (13).29 - 31 வரை விரும்பிய வசனம்
(14).32.50,805 33.4018 34.1.படத்தில் நிழற்றவும் 2.0.4 35.3kg
36.21வயது 37.400ml 38.32cm 39.1.04 2.12
40.1.இரண்டு தசம் இரண்டு ஐந்து 2.பூச்சியம் தசம் பூச்சியம் மூன்று 41.3மணி 30 நிமிடம்
42.6kg 450g 43.150.00 44.26 (15).45.2 46.3 47.1
48.2 49.1 50.3 51.3 52.4 53.3
54.4 55.2

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்





தரம் - 3 பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



**(01) பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக**

அவரவரின் வீட்டிலொரு
அழகுப்பூங்கா அமைப்போம்!
ஆடுமாடு மேய்ந்திடாமல்
அதற்கொரு வேலி அமைப்போம்

விவரமாகக் களைகளையும் நாம்
வேருடனே பறிப்போம்
வீரியமாய் வளர உரம்
விதைத்து நீரும் இறைப்போம்

பூவி நெகிழும் படியழகுப்
பூஞ்செடிகள் வளர்ப்போம்!
புத்தம் புதுப் பூக்களிங்கு
பூக்கக் கண்டு களிப்போம்.


01. எங்கு அழகுப்பூங்கா அமைக்க வேண்டும்? ..........................................
02. எதற்காக வேலி அமைக்க வேண்டும்? ..........................................
03. எதனை வேருடன் பறிக்க வேண்டும்? ..........................................
04. பூஞ்செடிகளை எப்படி வளர்க்க வேண்டும்? ..........................................
05. களிப்பு எதனால் ஏற்படும்? ..........................................
06. இப்பாடல் எதைப் பற்றிக் கூறுகிறது? ..........................................

**(02) பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக**

| | |
|---|---|
| 01. வீடு - .......................... | 02. பூங்கா .......................... |
| 03. உரம் - .......................... | 04. பூவி .......................... |
| 05. கற்போம் - .......................... | 06. அழகு - .......................... |

**(03) கூடுகளை நிரப்பி சொற்களாக்குக**

01. நரம்பில்லாத உறுப்பு
02. நடப்பதற்கு உதவும் உறுப்பு
03. சுவாசிக்க உதவும் உறுப்பு
04. உள்ளம் என்பதன் ஒத்தகருத்துச்சொல்
05. கனிகள் என்ற சொல்லின் ஒத்தகருத்துச்சொல்



**(04) பின்வரும் அறிவித்தலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக**

எங்கள் பாடசாலை ஆரம்பப்பிரிவு மாணவர் மன்றக்கூட்டம் 20.05.2015 பி.ப 1.00மணிக்கு நடைபெறும். சகல மாணவர்களையும் கூட்டத்திற்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

..........................
செயலாளர் கையொப்பம்

திகதி :- 10.05.2015

01. மாணவர் மன்றக்கூட்டம் எத்தனையாம் திகதி நடைபெறுகின்றது? ..........................
02. மாணவர் மன்றக்கூட்டத்திற்கு அழைப்பு விடுப்பவர் யார்? ..........................
03. எந்தப்பிரிவு மாணவர்களினது மன்றக் கூட்டமாகும்? ..........................
04. மன்றக்கூட்டம் எத்தனை மணிக்கு நடைபெறும்? ..........................

**(05) குறுக்கெழுத்துப் புதிர்களுக்கான விடைகளைக் கண்டுபிடித்து எழுதுக**

| | | | | |
|---|---|---|---|---|
| 01 | | 02 | | ■ |
| | ■ | | ■ | 03 |
| ■ | 04 | | | ■ |
| 05 | | | ■ | 06 |
| ■ | | ■ | 07 | |

இடமிருந்து வலம்
01. அதிகமாக ஆரம்பப்பிரிவு பிள்ளைகள் எழுதுவதற்கு இதனை பயன்படுத்துவார்கள்
02. ஓர் எழுத்தாலான உடலுறுப்பு ஒன்று
04. தகப்பன் என்பதன் ஒத்தசொல்
05. பெண்குரங்கை எவ்வாறு அழைப்பர்
07. நதியின் மறுபெயர்

மேலிருந்து கீழ்
01. ஆண் என்பதன் எதிர்ப்பாற்சொல்
02. சுவர் மூலைகளிலும் இது பின்னும் வலைகளைக் காணலாம்
04. தொலைபேசிக்கம்பி வழியாக அவசரமாக அனுப்பப்படும் தகவல்
06. நாம் உண்ணும் பிரதான உணவு

**(06) பின்வரும் சொற்களினது உயிர்க்குறிகளை எழுதுக**

01. வீடு - .................... 02. வீடு - ....................
03. வடை - .................... 04. வாடு - ....................
05. துண்டு - .................... 06. தொண்டு - ....................

**(07) நெடுங்கணக்கு வரிசைப்படி சொற்களை வரிசைப்படுத்தி எழுதுக**

01. நிழல், நீங்கள், நான்கு, நுங்கு, நண்டு ....................
02. கிணறு, காசு, கீதம், கயிறு, குதிரை ....................
03. யுத்தம், யானை, யூகம், யன்னல் ....................
04. விடுதலை, வாங்கு, வீரம், வண்டி ....................


**(08) பின்வரும் பாடலில் வரும் இடைவெளிகளை நிரப்புக**

01. தேன் போல் .................... சொல்ல வேண்டும்
தென்னை போல் .................... காட்ட வேண்டும்
மான் போல் .................... உணர வேண்டும்
மாடு போல என்றும் .................... வேண்டும்

02. காகம் போல் .................... வாழ வேண்டும்
கன்று போல் .................... யாட வேண்டும்
மேகம் போல .................... செல்ல வேண்டும்
மழை போல் .................... பொழிய வேண்டும்

| | |
|---|---|
| நன்றி | மானம் |
| இனியன | கூடி |
| நன்மை | உழைக்க |
| எங்கும் | துள்ளி |

**(09) படத்தை பார்த்து கதை கூறுக (வாக்கியம் எழுதுக)**



01. ....................
02. ....................
03. ....................
04. ....................

**(10) வினாக்களுக்கு விடை தருக**

01. கிழங்கு வகைகள் இரண்டை தருக?
i. .................... ii. ....................
02. பறவைகளில் பெரியது எது? ....................
03. அதிவேகமாக ஓடக்கூடிய மிருகம் எது? ....................



04. உயிரினங்களில் அதிக ஆண்டுகள் உயிர் வாழ்வது எது? ....................
05. சூரிய ஒளியில் ஏழு நிறங்கள் இருப்பதை கண்டுபிடித்தவர் யார்? ....................
06. இசைக்கருவிகள் எத்தனை வகைப்படும்? ....................
07. நீங்கள் வாசிக்கும் பத்திரிகை இரண்டின் பெயரை எழுதுக?
01. .................... 02. ....................

**(11) தடித்த சொற்களின் பொருளை தருக**

01. **ஓ**தாமல ஒருநாளும் இருக்க வேண்டாம் ....................
02. ஒருவரையும் **பொல்லாங்கு** சொல்ல வேண்டாம் ....................
03. **மாதாவை** ஒருநாளும் மறக்க வேண்டாம் ....................
04. **மனம்போன** போக்கெல்லாம் போக வேண்டாம் ....................
05. **தருமத்தை** ஒருநாளும் மறக்க வேண்டாம் ....................
06. **மூத்தோா்** சொல் வார்த்தைகளை மறக்க வேண்டாம் ....................
07. **செய்நன்றி** ஒருநாளும் மறக்க வேண்டாம் ....................

**(12) இடைவெளி நிரப்புக**

01. மயில்கள் .................... ஆடின (பலமாக / அழகாக)
02. மின்னல் .................... தாக்கின (உயரமாக / வேகமாக)
03. புலி ....................ப் பாய்ந்தது (பயந்து / பதுங்கி)
04. மலையிலிருந்து நீர் .................... ஓடியது (பாய்ந்து / துள்ளி)
05. பட்டம் வானில் .................... பறந்தது (பாடிப்பாடி / ஆடிஆடி)
06. மான்கள் .................... ஓடின (துள்ளி / குதித்து)
07. குரங்குகள் கிளைக்கு கிளை .................... (தாவின / குதித்தன)
08. புயல்காற்று .................... எழுந்தது (மெதுவாக / சீறி)

**(13) சரியான முடிக்கும் சொல்லை தெரிந்து கோடிடுக**

01. திருவள்ளுவர் இந்தியாவில் தமிழ் நாட்டில் (வாழ்கின்றார், வாழ்ந்தார், வாழ்வார்)
02. திருக்குறளில் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்கள் (உள்ளது, உள்ளன, இருந்தது)
03. திருக்குறள் பல கருத்துக்களை (கூறும், கூறியது, கூறுகிறது)
04. காகத்திற்கு நரியின் தந்திரம் புரிந்து (விட்டன, விட்டது, விடுகின்றன)
05. பலாக்காய்கள் நிறையத் (தொங்கியது, தொங்குகின்றது, தொங்குகின்றன)

**(14) விடுகதைகளுக்கு விடை தருக**

01. செய்யாத குடத்தில் சுவையான நீர் இருக்கிறது அது என்ன? ....................
02. மழை பெய்த பின் குடை பிடிப்பான் அவன் யார்? ....................
03. தலையை சீவினால் தாளில் கோலம் போடுவான் அவன் யார்? ....................
04. அடித்தால் விலகாது, அணைத்தால் நிற்காது அது என்ன? ....................
05. வெள்ளை மாளிகைக்குள் மஞ்சள் புதையல் அது என்ன? ....................

**(15) ஒலிமரபுகளை கருத்திற்கொண்டு சரியான விடையின் கீழ் கோடிடுக**

01. குதிரை (கத்தும், கனைக்கும், உதைக்கும்)
02. காகம் (பிளிறும், கரையும், கத்தும்)
03. எருமை (எக்காளமிடும், கதறும், கத்தும்)
04. ஆந்தை (அகவும், குறுகுறுக்கும், அலறும்)
05. கோழி (கூவும், அகவும், கொக்கரிக்கும்)

# படைவீரர்களை நினைவுகூரல் தெற்கில் ஏற்பாடுகள் தடல்புடல்





மாத்தறையில் நாளை நடைபெற வுள்ள போர் வீரர்களை நினைவு கூரும் தேசிய நிகழ்வில், வழக்கம்போலவே பாரிய இராணுவ அணிவகுப்பு இடம் பெறவுள்ளதாக, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், முதல்முறையாக, ஓய்வு பெற்ற படையினரும் அணிவகுப்பில் தனியாக இடம்பெறவுள்ளனர்.

இந்த அணிவகுப்பில், 3255 இராணு வத்தினர், 1615 கடற்படையினர், 1116 விமானப்படையினர், 959 காவற்துறை யினர், 559 சிவில் பாதுகாப்புப் படை யினர், இடம்பெறவுள்ளனர்.

அத்துடன், படையினரின் போர்ச்சாக சங்களையும், வீரதீரத்தையும் வெளிப்படுத தும், ஊர்திகளும், படையினரின் போர்க் கருவிகள் மற்றும் வாகனங்களும், இந்த அணிவகுப்பில் இடம்பெறவுள்ளன.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா மாத்தறைக்குச் சென்று இந்த அணிவகுப்பின் ஒத்திகை யைப் பார்வையிட்டார்.

இந்த நிகழ்வு நாட்டின் இறைமைக் காக உயிரை அர்ப்பணித்த போர் வீரர் களை கௌரவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக, பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து நாட்டை மீட்டெடுத்து 6 வருட நிறை வைக் கொண்டாடும் தேசிய விழாவும், இராணுவ வீரர் நினைவுதின நிகழ்வும் நாளையும் நாளை மறுதினமும் ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன தலை மையில் நடைபெறவுள்ளது.

நாளை நடைபெறவுள்ள தேசிய நிகழ்வு மாத்தறை சமுத்ரா மாவத்தையில் காலை 7.45 மணிக்கு ஆரம்பிக்கப் படவுள்ளது.

அத்துடன், நாளை மறுதினம் நடை பெறும் நிகழ்வுகள் ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டையிலுள்ள இராணுவ வீரர்களின் நினைவுத் தூபிக்கு அருகாமையில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற வுள்ளது.

# மேலும் ஐவர் கைதாக வாய்ப்பு

## நிதிமோசடி காரணம்

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் இலஞ்ச, ஊழல் உட்பட பல்வேறு குற்றச் சாட்டுக்களின் பேரில் அடுத்துவரும் ஓரிரு வாரத்துக்குள் இன்னும் ஐவர் கைது செய்யப்படவுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரி வித்துள்ளார்.

நிதி மோசடி குற்றச் செயல்கள் தொடர்பிலான பொலிஸ் விசாரணைப் பிரிவு, இரகசியப் பொலிஸ் பிரிவு என் பவற்றுக்கு இலஞ்ச, ஊழல் தொடர்பில் 169 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவை ஒவ்வொன்று குறித்தும் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ள தாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி இன்றைய சகோதர சிங்கள பத்திரிகை யொன்றிடம் குறிப்பிட்டுள்ளார்.

# வீதி விபத்தில் சிக்கி இரு பொலிஸார் மரணம்

(கொழும்பு)

கண்டி - மஹியங்கனை பிரதான வீதியின் சேனாபிட்டிய பிரதேசத்தில் இடம் பெற்ற வாகன விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

பொலிஸார் பயணித்த வான் ஒன்று டிபர் வாகனத்துடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற போது வானில் ஐந்து பொலிஸார் பயணித்துள்ளதோடு, அதில் இருவர் பலியாகிய நிலையில் மற்றைய மூவர் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை விபத்தில் உயிரிழந்தவர்கள் கலஹா பொலிஸ் பிரிவில் கடமையாற்று பவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

# துறைமுக நகர உருவாக்கம் திட்டத்தை அரசு எதிர்க்காது

சீனாவின் ஆதரவுடன் முன் னெடுக்கப்பட்டு வரும் கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை அரசாங்கம் எதிர்க்கவில்லை என முதலீட்டு அபிவிருத்தி சபையின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

சட்ட, சுற்றாடல் மற்றும் ஏனைய தேவைகளை பூர்த்தி செய்ததன் பின்னர் துறைமுக நகரத் திட்டத்தை முன்னெடுக்கப் பட்டால் அதனை அரசாங்கம் எதிர்க்காது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கை துறைமுக அதிகார சபை சட்ட மா அதிபர் திணைக் களத்தின் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்புத் துறை முகத் திட்டம் போன்றதொரு வர்த்தக திட்டத்தை முன்னெடுக்க வேண்டு மாயின் துறைமுக அதிகாரசபை அது தொடர்பில் நாடாளுமன் றில் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டுமென அவர் தெரிவித் துள்ளார்.

அபிவிருத்தித்திட்டத்தை அர சாங்கம் ஒருபோதும் எதிர்க்க வில்லை எனவும், சிறந்த சட் டங்களை மதித்து வெளிப்படை யான தன்மையுடன் திட்டம் முன்னெடுக்கப்படவேண்டு மென அவர் வலியுறுத்தியுள் ளார்.

# ஐ.நா. விசாரணைக்குழுவின் முன் முன்னாள் படை அதிகாரி சாட்சியம்

இலங்கை இராணுவத்திற்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள யுத்தக் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஐ.நா. விசாரணைக் குழுவில் முன்னாள் மேஜர் ஜெனரல் ஒருவர் இராணுவத் துக்கு எதிராக சாட்சி வழங்கி யுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

அமெரிக்காவுக்கு தப்பிச் சென்றுள்ள குறித்த முன்னாள் படைவீரர் சத்தியக் கடதாசி யொன்றின் மூலம் சாட்சிய மளித்துள்ளார்.

இருப்பினும், இந்த மேஜர் வன்னி யுத்தத்தின் போது தொடர்புபட்ட ஒருவர் அல்ல என தெரிவிக்கப்படுகின்றது.

புலி ஆதரவாளர்களினால் வழங்கப்பட்டுள்ள சாட்சிகளின் அடிப்படையில் பாதுகாப்புப் படையிலுள்ள 40 முக்கிய நபர் கள் மீது குற்றச்சாட்டுக்கள் வதிவாகியுள்ளன. இவ்வாறு சாட்சி வழங்கியவர்களுக்கு சுவிட்சர்லாந்தில் அரசியல் புகழிடம் வழங்கப்பட்டுள்ளதா கவும் குறிப்பிடப்படுகின்றது.

# புதிய தேர்தல் சீர்திருத்தம் மைத்திரியுடன் உபகுழு சந்திப்பு

தேர்தல் முறைமை சீர்திருத் தத்தின் போது எழும் பிரச்சினை களை ஆராய்வதற்கு நியமிக்கப் பட்ட விசேட அமைச்சரவை உபகுழு இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்திக்கவுள்ளது.

இக்குழுவில் அங்கம் வகிக் கும் அமைச்சர்களான கலாநிதி சரத் அமுனுகம, லக்ஷ்மன் கிரி யெல்ல, கயந்த கருணாதிலக்க, பாட்டலி சம்பிக்க ரணவக்க, ரவுப் ஹக்கீம், பீ. திகாம்பரம், ரிஷாட் பதியுதீன் ஆகியோர் கடந்த 14 ஆம் திகதி வியா ழக்கிழமை முதல் முறையாக கூடி தேர்தல் முறைமை கொண்டு வருவதில் உள்ள பிரச்சினைகள் குறித்து விரிவாக கலந்துரை யாடியுள்ளனர்.

இதற்கேற்ப, இங்கு கலந்துரை யாடிய விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் ஆகி யோருக்கு நாளை அறிவிக்க வுள்ளனர்.

அத்துடன், நாளை மறுதினம் புதன்கிழமை புதிய தேர்தல் முறைமை தொடர்பிலான முழுமையான அறிக்கை யொன்றை அமைச்சர வைக்கு சமர்ப்பிக்கவுள்ளதாகவும் ஊடகத் துறை அமைச்சரும் அரசாங்க கட்சியின் பிரதான அமைப்பாள ருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

# வடக்கு ரயில் சேவை மீண்டும் வழமைக்கு

வடக்கு ரயில் பாதையின் போக்குவரத்து நடவடிக்கைகள் நேற்று பிற்பகல் முதல் வழமைக்குத் திரும்பியதாக ரயில்வே கட்டுப்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மதவாச்சி - வவுனியா வரை இடம்பெற்ற அவசர திருத்தப் பணிகள் காரணமாக, ரயில் போக்குவரத்து அனுராதபுரம் வரை மட்டுப்படுத்தப்பட்டி ருந்தது.

இதன்படி நேற்று பிற்பகல் 01.45 மணியளவில் கொழும்பில் இருந்து புறப்படும் ருஜினி ரயில் வவுனியா வரை பயணிக்கும் என ரயில்வே கட்டுப்பாட்டு மத்திய நிலையம் குறிப்பிட் டுள்ளது.

இதேவேளை நேற்றுமுன் தினம் கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த ரயிலொன்றில் மோதி பெண் ணொருவர் பலியாகியுள்ளார்.

நாவலப்பிட்டி - பெண்குடு முல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் உயிரிழந்த பெண் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

சடலம் தற்போது நாவல பிட்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.


## வாழ்க வளமுடன்

பெயர் : ச.மீருனா
முகவரி: சிறுப்பிட்டி மேற்கு. நீர்வேலி.

அகவை 02 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................
முகவரி :- ..............................
பிறந்த ஆண்டு :- ..............................

..............................
பெற்றோர் கையொப்பம்

# சீனாவில் பேருந்து விபத்து; 35 பேர் உயிரிழப்பு




சீனாவில் ஷான்ஸி Shaanxi மாகாணத்தில் சன்குவா ஊார ரொய பகுதியில் மலையில் பேருந்தொன்று விபத்துக்குள்ளாகியதில் 35 பேர் உயிரிழந்துள்ளனர்

குறித்த பேருந்தில் 46 பேர் பயணம் செய்த நிலையில், மலை உச்சியிலிருந்து 30 மீற்றர் ஆழமான பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியது. இந்த விபத்தில் பேருந்து பயணம் செய்த 25 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த விபத்தில் காயமடைந்த 11 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளித்து வரும் நிலையில், இவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்துக் குறித்த மேலதிக விசாரணைகளை அந்நாட்டுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். சீனாவில் வீதி விபத்துக்கள் அடிக்கடி இடம் பெறுவதற்கு வீதி ஒழுங்கு விதிகளை மீறுவதே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு சீனாவில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

# எகிப்தின் முன்னாள் அதிபருக்கு மரண தண்டனை நிறைவேற்றம்



எகிப்தின் முன்னாள் அதிபர் மொஹமட் மோர்ஸிக்கு அந்நாட்டு நீதிமன்றம் ஒன்று மரண தண்டனை விதித்துள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் பெருமளவிலான கைதிகள் சிறைச்சாலையை உடைத்துக் கொண்டு தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பில் மொஹமட் மோர்ஸி மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது. மரண தண்டனை நிறைவேற்றப்பட முன்னதாக எகிப்தின் மத விவகார அதிகாரிகள் தண்டனை தொடர்பான தங்களின் நிலைப்பாட்டை அறிவிப்பார்கள்.

அரச இரகசியங்களை வெளியிட்டதாகவும் முன்னாள் அதிபர் மீது குற்றச்சாட்டு உள்ளது. அந்தக் குற்றச்சாட்டு தொடர்பான வழக்கின் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பினரால் ஆதரிக்கப்பட்ட மொஹமட் மோர்ஸி, 2013 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டார்.

அன்றிலிருந்து முன்னாள் அதிபருக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் எதிராக ஆட்சியாளர்கள் நீதித்துறையை கருவியாக பயன்படுத்துவதாக மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டிவருகின்றன.

# பருவ மழையால் கேரளாவில் 5பேர் பலி

கேரள மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கவுள்ளதால் அங்கு பலத்த மழை பெய்து வருகிறது.பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்து வருவதால் மக்களும் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

இந்நிலையில், தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து, 20 பேர் கேரளாவிற்கு சுற்றுலா சென்றுள்ளனர் இவர்கள், அங்குள்ள பூவார் ஆற்றில் படகு சவாரி செய்துகொண்டிருந்தபோது, திடீரென பெரிய அலை ஒன்று எழுந்ததில், ஒரு பெண் மற்றும் 4 குழந்தைகள் பலியானார்கள் படகில் மீதியிருந்தவர்கள், 'காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள்' என்று கூச்சலிட்டதைத் தொடர்ந்து, அங்கு விரைந்து சென்ற மீனவர்கள் ஆற்றில் விழுந்தவர்களை தேடும் பணியில் ஈடுபட்டனர்.

# மனித மாமிசத்தில் பலகாரம் உணவக பணியாளர்கள் கைது



நைஜீரியாவில் மனித மாமிசத்துடன் கூடிய பலகாரங்களை தயாரித்து, அவற்றை அதிகமான விலைக்கு விற்ற ஒரு உணவகத்தை அதிகாரிகள் இழுத்து மூடியுள்ளனர். மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதியில் இயங்கிவந்த அந்த உணவகத்தில் வேலை செய பவர்களின் நடவடிக்கைகள் சந்தேகப்படும்படியாக இருப்பதாக உள்ளூர் பொலிஸாருக்கும், சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கும் தொடர்ந்து புகார்கள் வந்தன.

இதையடுத்து அந்த உணவகத்திற்குள் அதிரடியாக நுழைந்த சுகாதாரத்துறை அதிகாரிகள், 'பப்ஸ்' போன்ற ஒருவகை பலகாரத்தில் மனித மாமிசத்தை கலந்து தயாரிக்கப்படுவதை கண்டு பிடித்தனர். அங்குள்ள அலுமாரியில் இருந்த ஒரு பிளாஸ்ரிக் கவருக்குள் இரத்தம் சொட்டச் சொட்ட மனித தலைகள் வைக்கப்பட்டிருந்ததை கண்டு திடுக்கிட்ட பொலிஸார், 'அந்த உணவகத்தில் பணியாற்றும் பத்துக்கும் அதிகமானவர்களை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# அமெரிக்க இராணுவ தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ். மூத்த உறுப்பினர் பலி



சிரியாவில் ஆதிக்கம் செலுத்திவரும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தின் மூத்த தலைவரான அபு சய்யப் என்பவர் அமெரிக்க சிறப்புப் படை வீரர்களால் கொல்லப்பட்டதாக அமெரிக்காவின் இராணுவ தலைமையகமான பென்டகன் அறிவித்துள்ளது.

ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள எண்ணெய் கிணறுகள் மற்றும் அவற்றில் இருந்து எடுக்கப்படும் கச்சா எண்ணெய் விற்பனை, எரிவாயு விற்பனை உள்ளிட்ட ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தின் நிதி கட்டுப்பாட்டாளராகவும், ஆலோசகராகவும் இருந்து வந்த அபு சய்யப், கிழக்கு சிரியாவில் அமெரிக்க சிறப்புப் படைகள் நடாத்திய அதிரடி தாக்குதலில் கொல்லப்பட்டார்.

அவரது மனைவி உம் சய்யப் என்பவர் சிறைபிடிக்கப்பட்டுள்ளார் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. சிரியா நாட்டின் பெற்றோலிய துறை மந்திரி போல் அபு சய்யப் செயற்பட்டார் என கூறப்படுகிறது. சிரியாவில் யாஷிடி இனப் பெண்களை கடத்திச் சென்று சிறைவைத்ததில் அபு சய்யப்பின் மனைவியான உம் சய்யப் முக்கிய பங்காற்றியதாகவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

உலகச் செய்திகள்

# முதலையை அடக்கிய இளவரசர் ஹரி



அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரித்தானிய இளவரசரான ஹரி, அங்குள்ள வன அதிகாரிகளுடன் இணைந்து மூர்க்கத்தனமான முதலையை அடக்கிய சம்பவம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

அவுஸ்ரேலிய இராணுவத்துடன் இணைந்து பிரித்தானிய இளவரசரான ஹரி கடந்த ஒரு மாதமாக பல்வேறு இராணுவ பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.சில தினங்களுக்கு முன் டாஸ்மேனியாவிற்கு சென்ற இளவரசர் ஹரி, அங்குள்ள மலைவாழ் மக்களிடம் மிகவும் நெருக்கமாக பழகி அவர்களை உற்சாகத்தில் மூழ்கடித்தார்.

அவுஸ்ரேலிய இராணுவத்துடன் இணைந்து, அடர்ந்த வன பகுதியில் சிக்கிக்கொண்டால் எவ்வாறு மீண்டு வருவது? இராணுவ ஹெலிகொப்டர்களை இயக்குவது, வன விலங்குகளிடமிருந்து எவ்வாறு தப்பிப்பது உள்ளிட்ட பல பயிற்சிகளை இளவரசர் ஹரி மேற்கொண்டார்.

Darwin Harbour பகுதியில் 3.1 மீற்றர் நீளமுள்ள முதலை ஒன்று அபாயகரமான இடத்தில் சிக்கி தவித்துள்ளது அதனை மீட்கும் நோக்கத்தில் இளவரசர் ஹரி மற்றும் பிற வன அதிகாரிகள் ஈடுபட்டனர். முதலையை துணிச்சலாக நெருங்கிய இளவரசர் ஹரி, அதனை அடக்கி பிடிக்கும் பணியில் அதிகாரிகளுடன் இணைந்து அபாயகரமாக செயற்பட்டார் என புகழாரம் சூட்டியுள்ளார்.

பின்னர், முதலையை மீட்ட பின்னர், அதனுடைய வாயை முதலைக்கு பாதிப்பு ஏற்படாதவாறு இளவரசர் ஹரி புகைப்படம் எடுத்துக்கொண்டார். அவுஸ்ரேலிய அரசாங்கம் முதலையுடன் இளவரசர் ஹரி இருக்கும் படத்தை இன்று வெளியிட்டதை தொடர்ந்து ... வேகமாக இணையதளங்களில் பரவி வருகிறது.

# காதலுக்காக 7 பேர் கொலை ஜோடிகளுக்கு தூக்குத் தண்டனை

## உத்தர பிரதேசத்தில் பரபரப்பு

உத்தரபிரதேசத்தில் 7 பேரை கொலை செய்த காதல் ஜோடிக்கு உச்சநீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்துள்ளது. உத்திரப்பிரதேச மாநிலம் மொரதாபாத் அருகில் உள்ள பாபன் கேரா கிராமத்தை சேர்ந்த பட்டதாரி ஆசிரியையான ஷபனம் என்பவர், சலீம் என்ற வாலிபரை காதலித்தார். இருவரும் நெருங்கிப் பழகியதில் ஷபனம கர்ப்பம் ஆனார்.

இது பெற்றோருக்கு தெரிய வந்ததும் அவர்கள் கண்டித்தனர். மேலும் சலீமுடன் பழகுவதற்கும் தடை விதித்தனர். இதையடுத்து காதலுக்கு தடையாக உள்ள தனது குடும்பத்தை காதலனுடன் சேர்ந்து தீர்த்துக்கட்ட ஷபனம் திட்டமிட்டார்.

அதன்படி, சம்பவத்தன்று இரவு டீயில் மயக்க மருந்தினை, கலந்து பெற்றோர், 2 சகோதரர்கள், மைத்துனி அவர்களது 2 குழந்தைகள் ஆகியோருக்கு கொடுத்துள்ளார். அவர்கள் தூங்கியதும் ஷபனம் தனது வீட்டுக்கு காதலனை வரவழைத்தார், இரும்பு கம்பியுடன் வந்த காதலன் சலீம், 6 பேரையும் அடித்து கொலை செய்துள்ளார். பிறகு 10 மாத கைக்குழந்தையை ஷபனம் அடித்து கொன்றுள்ளார்.கடந்த 2008ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் திகதி இந்த சம்பவம் நடந்தது. மொரதாபாத் பொலிசார் விசாரணை நடத்தி ஷபனம் சலீம் ஜோடியை கைது செய்தனர்.அவர்கள் மீது செசன்ஸ் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அங்கு இருவருக்கும் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

தண்டனையை அலகாபாத் உயர்நீதிமன்றம் உறுதி செய்து தீர்ப்பு அளித்தது.தூக்கு தண்டனையை எதிர்த்து இருவரும் உச்சநீதிமன்றத்தில் அப்பீல் செய்தனர். இந்த மனு நேற்றுமுன் தினம் தலைமை நீதிபதி எச்.எல்.தத்து, நீதிபதிகள் எஸ்.ஏ.பாப்தே, அருண் மிஸ்ரா ஆகியோர் கொண்ட அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. ஷபனம் சலீம் ஜோடிக்கு கீழ்நீதிமன்றம் விதித்த தூக்கு தண்டனையை நீதிபதிகள் உறுதி செய்தனர்.

# மீள் குடியேற்றத்தை உறுதிப்படுத்தக் கோரி மறிச்சிக்கட்டி மக்கள் ஆர்ப்பாட்டம்




(மன்னார்)

தமது மீள்குடியேற்றத்தை உறுதிப்படுத்துமாறு கோரி மன்னார், மறிச்சிக்கட்டி கிராம மக்கள் நேற்று முன்தினம் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

தேசப்பற்றுள்ள முஸ்லிம் முன்னணி எனும் அமைப்பினரின் தலைமையில் இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றன. மன்னார் வில்பத்து வனப்பகுதியை அழித்து அங்கு முஸ்லிம் குடும்பங்கள் மீள்குடியேற்றங்கள் செய்யப்பட்டு வருவதாக பொது பல சேனா, சிங்கள ராவய மற்றும் ஒருசில ஊடகங்கள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களின் உண்மைத் தன்மையை அறிந்துகொள்ளும் பொருட்டு தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் குழு நேற்று முன்தினம் முசலி பிரதேச கிராமங்களுக்கு விஜயம் செய்தது.

இதன்போதே மறிச்சிக்கட்டி கிராம மக்கள் தமது கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மறிச்சிக்கட்டி எமது பூர்வீக பூமி, வில்பத்து மிருகங்களின் வசிப்பிடம். ஆனால் மறிச்சிக்கட்டி எமது வசிப்பிடம், வில்பத்து பிரச்சினையின் பின்னணியில் முஸ்லிம் விரோத அமெரிக்க மிஷனரிகளுடன் தமிழ் டயஸ்போரா, வில்பத்துவை காக்கும் போர்வையில் மறிச்சிக்கட்டி முஸ்லிம்களை துரத்திய சதியை முறியடிப்போம், வாழ்விட பூமி கேட்டுப்போராடிய முஸ்லிம் சமூகத்துக்கு அமைச்சர் ரிசாட் உதவி செய்தது தவறா? இதுபோன்ற பல வாசகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கே முன்னுரிமை

## ஜனாதிபதி தெரிவிப்பு

தான் நாட்டின் தலைவர் என்ற ரீதியில் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுப்பதற்கு முன் நிற்பதாகவும் எந்தவொரு நபருடைய தனிப்பட்ட கொள்கைக்காகவும் தான் செயற்படுவதில்லை எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலன்நறுவையில் நேற்று இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையில் காணப்பட்ட அதிகூடிய அதிகாரங்களை நீக்கிவிட்டு 37 வருடங்களாக நாட்டு மக்கள் கேட்டுக்கொண்ட அரசியல் மாற்றம் ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டது.

இது போன்று, சுதந்திரக் கட்சியின் அனைத்து அரச தலைவர்களின் கோஷம் நிறைவடைய தான் செயற்படுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை வலுவடையச் செய்தமை போன்று,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினுள் ஜனநாயகத்தை கட்டியெழுப்பி அதிகூடிய பலம்மிக்க உறுப் புரிமை கிடைக்கும் வகையில் கட்சியைப் பலப்படுத்துவதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆறாத வடுக்களுடன்...

களை வீட்டு உரிமையாளர்களே செய்ய வேண்டும் என்று வீடுகளைக் கட்டிக்கொடுத்தவர்கள் தெரிவித்திருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். சாப்பாட்டுக்கே வழியற்ற நிலையில் வீட்டுச் சுவர்களுக்கான பூச்சு வேலைகளை எவ்வாறு மேற்கொள்வது என்று அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இருந்த போதிலும் கூடாரங்களிலும், கொட்டில்களிலும் சிரமப்பட்டுக் கொண்டிருந்த தங்களுக்கு இந்தக் கல் வீடுகள் பாதுகாப்பையும், நிம்மதியையும் அளித்திருப்பதாகவும் அவர்கள் நன்றியோடு குறிப்பிடுகின்றனர்.

புதிய வீடுகள் பாதுகாப்புணர்வைத் தந்தாலும் போரின் கொடுங் கனவுகள் போகமறுக்கின்றன.

இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளுக்குப் போதிய நிதி இல்லாத காரணத்தினால் அந்த வீடுகளை முழுமையாக நிர்மாணிக்க முடியாதிருப்பதாக இன்னும் சிலர் கூறுகின்றனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மீள்குடியேற்றப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட அபிவிருத்திப் பணிகள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும், இறுதி யுத்தத்தின் போது இந்தப் பிரதேசத்தில் நிகழ்ந்த மோசமான உயிரிழப்புக்கள், பாதிப்புகளில் இருந்து அந்த மக்கள் மீட்சி பெறும் வரையில் அங்கு உண்மையான அபிவிருத்தியைக் காண முடியாது என்று சிவானந்தரூபி செந்தமிழ்ச்செல்வன் என்ற பெண்மணி பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

யுத்த மோதல்களின்போது சீறி வந்த துப்பாக்கிக்குண்டுகள், எறிகணைகள் மற்றும் குண்டுகளின் தாக்குதல்களில் சிக்கிக் காயமடைந்தவர்களையும், இறந் தவர்களையும் ஏற்க முடியாமல் தவித்த தற்காலிக வைத்திய சாலையாகச் செயற்பட்ட முள்ளிவாய்க்கால் மேற்கு பாடசாலை இப்போது புதுப்பொலிவு பெற்று கல்வியிலும் சிறந்து விளங்குவதாக அங்குள்ள ஆசிரியர்களும் மாணவர்களும் தெரிவித்தனர்.

மோசமான யுத்த மோதல்களில் சிக்கி, உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில், மரணத்தின் விளிம்புவரை சென்று திரும் பியுள்ள தாங்கள், இப்போதுள்ள சூழலில் அங்கு வாழ முடியும் என்று கனவிலும் எதிர்பார்த் திருக்கவில்லை என்றும், அன் றைய நிலைமைகளை மீண்டும் எண்ணிப்பார்க்கும்போது, மரண பயமே தமது மனங்களைச் சூழ்ந்து கொள்வதாகவும் அங்குள்ள பலரும் தெரிவித்துள்ளனர்.

## இறுதிக்கட்ட...

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்து 6 ஆண்டுகள் முடிந்துவிட்டன.

ஒவ்வொரு ஆண்டும் மே 18 ஆம் திகதி இலங்கையில் உள்நாட்டு யுத்தம் காரணமாக 25 ஆண்டுகளாக தமிழர்கள் அனுபவித்த துன்பங்களே நம் நினைவுக்கு வரும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கனடாவிலுள்ள தமிழ் அமைப்புகளின் உறுப்பினர்களுடன் சேர்ந்து நானும் இலங்கையில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதை நினைவு கூருவதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்ட கொடுமையான யுத்தத்தின் காரணமாக ஏராளமான தமிழர்கள் கனடாவுக்கு அகதிகளாக வந்ததையும் தாங்கள் நினைத்துப் பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூர வேண்டும் எனக் கனடா அரசு உறுதிபூண்டுள்ளது.

இலங்கையில் இறுதி யுத்தத்தின் போது இராணுவத்தினரால் கொல்லப்பட்ட 40 ஆயிரம் தமிழர்கள் குறித்து முழுமையான விசாரணை நடத்த வேண்டும் என தமது நாட்டு அரசு தொடர்ந்து குரல் எழுப்பிவருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இனப்படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 2013 ஆம் ஆண்டு இலங்கையில் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணித்தது போல் கனடா அரசு இந்த விவகாரத்தில் உண்மையான விசாரணைக்காக என்றும் வலியுறுத்தும் என அந்த அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## துயர் சூழ்ந்த...

குறித்த கற்பனைகளையும் எமது மக்கள் தமது மனங்களில் நிறுத்தி,

வீழ்வோம் ஆயினும், வீழ்ச்சியில் இருந்து எழுந்து நிமிர்ந்து மறுபடி வாழ்வோம் என்ற நம்பிக்கையோடு காத்திருந்தனர். ஆனாலும், சாவுகளும், எம் தேசம் எரிந்தொழிந்த சாம்பல் மேடுகளும் மட்டுமே எமது மக்கள்ளச் சூழ்ந்து கொண்டன.

எமது மக்களின் அவலங்களையும், இழப்புக்களையும், இடம் பெயர்வுகளையும், சொந்த உறவுகளை இழந்து துடிதுடிக்கும் அவர்களது துயரங்களையும் சொல்லியழுது அதில் சுயலாப அரசியல் நடத்துவது எமது விருப்பமல்ல.

எந்த அரசியல் வழிமுறையால் எமதுமக்கள் இத்தனை இழப்பின் துயர்களைசந்தித்தார்களோ, அந்த வழிமுறையின் தவறுகளைத் திருத்தி எழுதி நாம் சரியான திசைவழி நோக்கிச் செல்ல வேண்டும்.

எந்த இலட்சியக் கனவுகள் எமது மக்களின் மனங்களில் குடி கொண்டிருந்தனவோ,

அந்த இலட்சியக் கனவுகளை அடையும் யதார்த்த வழிமுறையில் எமது மக்கள் முன்னேறி செல்ல முன்வர வேண்டும். இறந்து போன எமது மக்களுக்கு நாம் செலுத்தும் அஞ்சலி மரியாதை என்பது, வாழ்ந்து கொண்டிருக்கும் எமது மக்களுக்கான உரிமை வாழ்வைப் பெற்றுக் கொடுப்பதும்,

இனியொரு அவலம் தரும் அழிவு நிலை எமது மக்களைச் சூழ்ந்து விடாது பாதுகாப்பது மேயாகும். அதற்காக நாம் முன்னெடுத்த முயற்சிகளும் நடைமுறைகளும் எமது பணி களும் சூழ்ந்துவரும் சூழ்ச்சிகளை தடையுடைத்து தொடர்ந்தும் முன்னோக்கிச் செல்லும்.

தமிழ் பேசும் மக்கள் தோற்றுப்போன இன சமூகத்தவர்கள் அல்ல. தவறான வழிமுறைகளே தோற்றுப்போனவவை. நாம் நேசித்து, எமது மனங்களில் குடிகொண்டு, மரணித்துப்போன எமது மகத்தான மக்களின் மனித உயிர்களுக்கு நாம் அஞ்சலி மரியாதை செலுத்துகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புங்குடுதீவு...

கடற்படையின் படகு மூலம் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்களைத் தம்மிடம் ஒப்படைக்கக் கோரி திரண்ட மக்கள் கல்லெறி வீசித் தாக்குதல் நடாத்தியதில் மூன்று பொலிஸாரும் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரின் உறவினரான புங்குடுதீவைச் சேர்ந்த றேகன் என்பவர் நேற்றிரவு வேலணைக்கு ஆட்டோவில் சென்ற வேளை துறையூர் என்னு மிடத்தில் திரண்ட மக்கள் அவரைப் பிடித்து இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கட்டி வைத்து நையப்புடைத்துள்ளனர்.

இதனால் நேற்றிரவு நள்ளிரவு தாண்டியும் பதட்டமான சூழ்நிலையே அங்கு காணப்பட்டது. பொதுமக்களால் பிடிக்கப்பட்டவர் அண்மையிலேயே ஐரோப்பிய நாடொன்றில் இருந்து வருகை தந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சம்பவம் தொடர்பில் கேட்டறிந்து கொண்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இவ்விடயம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (21)

## மூன்று....

நேற்று ஞாயிற்றுக்கிழமை வரையில் 293.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இது கடந்த வருட மே மாதம் வரையான மொத்த மழை வீழச் சியைவிட இரண்டு மடங்கிலும் அதிகமாக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

## தேர்தல்...

செப்ரெம்பர் மாதத்துக்குப் பின்னர் ஒரே நாளில் தேர் தலை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மொத்தமுள்ள 335 உள்ளூராட்சி சபைகளில் தம்புள்ள, பண்டாரவளை, அக்கரைப்பற்று மாநகர சபைகள் உட்பட 234 உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டுள்ளன. இந்த உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்தன.

அதன் பின்னர் இச்சபைகளுக்கு மே 15 ஆம் திகதி வரையான ஒன்றரை மாத கால நீடிப்பு வழங்கப்பட்டது. இதன்படி இச்சபைகள் கலைக்கப்பட்டன.

ஏனைய உள்ளூராட்சிச் சபைகளில் சிலவற்றின் காலம் எதிர் வரும் யூலை மாதமும், சில வற்றின் பதவிக் காலம் செப்ரெம்பர் மாதமும் முடிவடைகின்றன.

இவைகள் அனைத்தும் குறிப்பிட்ட காலத்தில் கலைக்கப்படும்.

செப்ரெம்பர் மாதத்துக்குப் பின்னர் நாட்டிலுள்ள 335 உள்ளூராட்சி சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடத்தப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## கோத்தாவின்...

செய்த மனுவை உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

இதன்போது உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சட்டரீதியானது என எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித் துள்ளார்.

ரணில் விக்ரமசிங்க போன்ற பிரபல அரசியல்வாதி ஒருவர் குறித்த தீர்ப்பை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளமை மிகவும் மனவருத்தத்தை அளிப்பதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இ.போ.ச....

யின் பஸ்ஸும் கைதடி வீதியில் இருந்து பருத்தித்துறை வீதியில் ஏற முற்பட்ட ஆட்டோவுமே மோதி விபத்துக்குள்ளாகின.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த ஆட்டோவின் சாரதி உட்பட மூவர் கோப்பாய் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். விபத்துக் குறித்து கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜெகத் டயஸின் நியமனம் நீதிக்கு விழுந்த அடி

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் கண்டனம்

மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸை, இலங்கை அரசாங்கம் இராணுவத் தலைமை அதிகாரியாக நியமித்தமையானது யுத்த பாதிப்பிற்குள்ளான மக்களின் முகத்தில் அறைந்த செயலென மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

நியூயோர்க்கை தலைமையகமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இறுதிக்கட்டப் போரில் அதிகளவான மனித உரிமை மீறல்களைப் புரிந்த படைப் பிரிவுக்குத் தலைமை தாங்கிய, மூத்த அதிகாரிக்கு, இலங்கை அரசாங்கம் பதவி உயர்வு வழங்கியிருப்பது, போர்க் குற்றங்கள் குறித்து நம்பகமான விசாரணை நடத்துவதாக அரசாங்கம் கொடுத்திருந்த வாக்குறுதி மீது சந்தேகம் கொள்ள வைக்கிறது.

போர்க்கால மீறல்கள் குறித்து, நியாயமான வகையில் பொறுப்புக்கூற நடவடிக்கை எடுப் பதாக, புதிய அரசாங்கம் வாக் குறுதி அளித்திருந்தது.

ஆனால் குற்றச்சாட்டுக்குள்ளாகியிருக்கும் ஒரு படைப்பிரிவின் ஜெனரல், இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளதானது, பாதிக்கப்பட்டவர்களின் முகத்தில் அறைந்த செயலாகும்.

இலங்கையில் உண்மையான பொறுப்புக்கூறலை எதிர்பார்க்கும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உறுப்பு நாடுகள், அரசாங்கத்தின் செயற்பாடுகளை உன்னிப்பாக ஆராய வேண்டும்.

மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸுக்கு இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ள நியமனமானது, நடுநிலையான விசாரணை மற்றும், சட்டநடவடிக்கைகளுக்கு, ஒரு வலுவான அனைத்துலகப் பங்களிப்புடன் கூடிய சுதந்திரமான நீதிச் செயல்முறை ஒன்று இலங்கைக்குத் தேவை என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

கொடூரமான போர் முடிவுக்கு வந்து ஆறு ஆண்டுகளாகியும், பாதிக்கப்பட்டவர்கள் இன்னமும் நீதிக்காக காத்திருக்கின்றனர் என்றும் தெரிவித்துள்ளது.

# உணர்வுகளுக்கு மதிப்பளித்தால் இனரீதியான இடைவெளி குறையும்


## அஞ்சலி செய்தியில் சந்திரகுமார் எம்.பி.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த இறுதிப் போரின் போது பலியாகிய அனைவருக்கும் எமது அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்கள் எமது மக்களின் உணர்விலும் நினைவிலும் ஆழப் பதிந்தவை. இந்த உணர்வுகளைப் புரிந்துகொண்டு, மதிப்பளிப்பதன் மூலமாக நாம் இந்த நாட்டில் இனரீதியாக உள்ள இடைவெளிகளைக் குறைத்து நல்லெண்ணத்தை உண்டாக்க முடியும். பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதும் இடமளிப்பதும் முக்கியமானது.

அது அவர்களை உளரீதியாக ஆற்றுப்படுத்தி பொதுவெளியில் இணைந்துகொள்ள உதவும். பகை மறப்பிற்கும் நல்லெண்ணத்திற்கும் ஜனநாயக உரிமைக்குமான தொடக்கமாகவும் அடையாளமாகவும் இந்த நாட்களின் துயர நிகழ்வுகளுக்கு ஒன்றிணைந்து அஞ்சலி செய்வோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பிளே ஓவ் சுற்றில் பெங்களூர் ரோயல்ஸ்



(பெங்களூர்)

டில்லி, பெங்களூர் அணிகள் மோதிய நேற்றைய போட்டி மழையால் இரத்து செய்யப்பட்டது. இதனையடுத்து பெங்களூர் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.


பெங்களூரில் நேற்று நடந்த போட்டியில் பெங்களூர் - டில்லி அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூர் அணி கப்டன் கோலி பந்து வீச்சை தேர்வு செய்தார்.

டில்லி அணிக்கு ஸ்ரேயாஸ் 20 ரன்கள் மட்டும் எடுத்தார். சிறப்பாக விளையாடிய குயின்டன் அரைச் சதம் (69) விளாசினார். யுவராஜ் சிங் (11), ஜாதவ் (0) ஏமாற்றினர். கப்டன் டுமினி அரைச் சதம் அடித்தார். டில்லி அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 187 ரன்கள் எடுத்தது. டுமினி (67), சவுரப் திவாரி (13) அவுட்டாகாமல் இருந்தனர்.

கடின இலக்கை விரட்டிய பெங்களூர் அணி 1.1 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 2 ரன்கள் எடுத்திருந்தபோது, மழை குறுக்கிட்டது. இதன் பின் சுமார் 1.30 மணி நேரம் மழை தொடர, போட்டி இரத்துச் செய்வதாக அறிவிக்கப்பட்டது. கோலி (1), கெய்ல் (1) அவுட்டாகாமல் இருந்தனர்.

இதன் மூலம் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளிகள் வழங்கப்பட்டது. இதனையடுத்து பெங்களூர் அணி (16 புள்ளி) "பிளே-ஒப்" சுற்றுக்கு முன்னேறியது.

# மும்பை அணியும் பிளே ஓவ் சுற்றுக்கு தகுதி




(ஹைதராபாத்)

மும்பை இந்தியன்ஸ் மற்றும் ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற வாழ்வா சாவா ஆட்டத்தில் 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று பிளே ஓவ் சுற்றுக்குள் நுழைந்தது மும்பை இந்தியன்ஸ் அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஹைதராபாத் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. எனினும் மும்பை அணியின் அபார பந்துவீச்சால் சின்னாபின்னமாகியது. 20 ஓவர்களில் அவ்வணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களையே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் ராகுல் அதிகபட்சமாக 25 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் மக்லநகன் 3, மலிங்க மற்றும் சுச்சித் தலா 2 விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலளித்து ஆடிய மும்பை அணி சிம்மன்ஸ் மற்றும் பார்த்தீவ் பட்டேல் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் இலகுவாக வெற்றியீட்டியது.

13.5 ஓவரில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை எட்டியது. துடுப்பாட்டத்தில் சிம்மன்ஸ் 48, பார்த்தீவ் பட்டேல் ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்த வெற்றி மூலம் மும்பை அணியும் பிளே ஓவ் சுற்றுக்குள் நுழைந்துள்ளது. போட்டியின் ஆட்டநாயகனாக மக்லநகன் தெரிவானார்.

# மகிந்தவையும் விமலையும் சிறைப்படுத்துவதற்கு சதி

## தேசிய சுதந்திர முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சவாலாக விளங்கக்கூடிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும், தேசிய சுதந்திர முன்னணித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவையும் சிறைப்படுத்தும் வேட்டை ஒன்று இடம்பெற்று வருவதாக தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸ்ஸாமில் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதேவேளை பொலிஸ் நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவு, பிரதமரின் அறிவுரைகளுக்கமைய செயற்படும் நிறுவனமாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் கடந்த காலங்களில் இருந்த பொலிஸ் சுயாதீனத் தன்மையை வீணடித்துள்ளதாகவும் முஸ்ஸாமில் குறிப்பிட்டுள்ளார்.



வேட்டையாடும் நடவடிக்கைகள் திட்டமிட்ட வகையில் முன்னெடுத்துச் செல்லப்படுவதாகவும், தங்களுக்கு சவாலாக உள்ள அனைவரையும் சிறைப்படுத்த முயற்சிப்பதாகவும், இதற்காக மிகவும் வஞ்சகமான முறையில் செயற்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 16 சு.க. அமைச்சர்கள் அரசிலிருந்து விலகுவர்

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தில் அமைச்சர், பிரதியமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர் பதவிகளை வகிக்கின்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 26 பேரில் 16 உறுப்பினர்கள் அரசாங்கத்திலிருந்து விலகவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் டி.பீ.ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இந்தத் தீர்மானத்தை அடுத்த வாரத்தில் அவர்கள் எடுக்கவுள்ளதாகவும் அவர்களின் வாக்காளர்கள் கொடுக்கும் அழுத்தத்தின் காரணமாகவே இந்த 16 பேரும் அரசாங்கத்தில் இருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அரச வாகனங்களை ஒப்படைக்க தயங்கும் முன்னாள் அமைச்சர்கள்

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தில் அமைச்சர்களாக பதவி வகித்த பலர் இன்னும் தமது பொறுப்பின் கீழ் இருந்த வாகனங்களை ஒப்படைக்காதிருப்பதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த வாகனங்களை உடனடியாக பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி தன்னிடம் கோரியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அமைச்சரவைக்கு அறிவிக்குமாறும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார் எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

# தங்கத்துடன் இலங்கையர் திருச்சியில் சிக்கினார்

இலத்திரனியல் உபகரணத்தில் மறைத்து வைத்த நிலையில் மூன்று கிலோகிராம் தங்கத்தை கடத்த முற்பட்ட போது, திருச்சி விமான நிலையத்தில் வைத்து இலங்கையர் ஒருவர் கைது செயயப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தின் ஊடாக, நேற்று முனதினம் திருச்சி விமான நிலையத்தை வந்தடைந்தபோது குறித்த இலங்கையர் கைது செய்யப்பட்டுள்ளார். கைப்பற்றப்பட்ட தங்கத்தின் பெறுமதி சுமார் 80 இலட்சம் இந்திய ரூபா என் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# வெலே சுதாவின் சகோதரர் ஹெரோயினுடன் கைது



பாரிய அளவிலான போதைப் பொருள் வியாபாரத்துடன் தொடர்புடையவர் என கைது செய்யப்பட்ட சமன்த குமார எனப்படும் வெலே சுதாவின் சகோதரர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுப் பகல் கொகுவல பொலிஸாரால் இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இந்த சுற்றிவளைப்புக்களின் போது, 2 கிராம் 300 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது இவர் வெலே சுதாவின் இளைய சகோதரர் எனத் தெரிய வந்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மே 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.